KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 07 Aug 2026 இதழ்:- 20


# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# கோட்டபாயவிற்கு யாழ்.நீதிமன்றம் பிறப்பித்த விசேட உத்தரவு!



யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகிய இருவர் தொடர்பில் கொழும்பில் பிரதான நீதிவான் நீதுமன்றில் செப்பரம்பர் 29 ம் திகதி பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்சே முன்னிலையாகி நிகழ்நிலையில் சாட்சியம் அளிக்க யாழ்.நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாண நகரில் நடத்த திட்டமிடப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்க மைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்கால் பகுதியில் வைத்து முதல் நாள் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

2017 இல் இவ்வழக்கின் சாட்சிகள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபய ராஜபக்ச வின் பெயர் சேர்க்கப்பட்டது. பாதுகாப்பு காரணங்களினால் தம்மால் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாக முடியாது எனப் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டபய ராஜபக்ச நீதிமன்றத் திற்கு அறிவித்திருந்ததுடன் தனது சட்டத்தரணிகள் ஊடாக இணையவழியில் சாட்சியமளிக்க அனுமதி கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் 2 முன்னாள் அதிஉயர் அதிகாரிகளுக்கு மரணதண்டணை! - இதோ முழுவிபரம்

ஈஸ்டர் தாக்குதல் குறித்து முன் கூட்டியே உளவுத்துறை எச்சரித்திருந்த போதிலும், நடவடிக்கை எடுக்கத் தவறியமை உள்ளிட்ட மூன்று குற்றச் சாட்டுகளில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு மூவரடங்கிய விசேட மேல் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி யுள்ளது.





கடந்த 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவம் நடக்கவிருப்பதாக புலனாய்வுத் தகவல் கள் கிடைத்திருந்த போதிலும், அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை களை எடுக்கத் தவறியமை, கடமை பொறுப்புகளை தவறியமை, மனித படுகொலைக்கு ஆதரவு வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் (5ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியுடன் தமிழ் - முஸ்லிம் அரசியல் கட்சிகளின் முக்கிய சந்திப்பு! தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டதற்கு ஜனாதிபதி அநுரா நன்றி தெரிவிப்பு!



தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சி களின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடை யிலான முக்கிய சந்திப்பு கடந்த 03 ஆகஸ்ட் 2026 திற்கட் கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. ஆறு தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் இணைந்து உருவாக்கிய கூட்டணியின் சார்பில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது புதிய அரசியலமைப்பை உருவாக்குதல், மாகாண சபைத் தேர்தலை விரை வாக நடத்துதல், வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களின் நீண்டகால பிரச்சினை களுக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் ஜனாதிபதியின் கவனத்திற் குக் கொண்டு வரப்பட்டன. மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தெரிவுக்குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தலை நடத்துவதில் (3ம் பக்கம் பார்க்க)

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**



RE/MAX ACE REALTY INC., BROKERAGE — EXPERIENCE THE DIFFERENCE — INDEPENDENTLY OWNED & OPERATED — we are ace


**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

**Piravien Siva** B.Comm.
Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com


150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada
Bus: 416-293-4500




23 Years Real Estate Experience

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


## Adelaide Ave E / Simcoe St



**Oshawa** $699,000

3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


## Kingston Rd & Sheppard Ave E



**Scarborough** $710,000

3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area


## Islington Ave / Steeles Ave W



**Toronto** $749,000

4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse


## Neilson Road & Sheppard



**Scarborough** $839,000

4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!


## Danforth and Dawes



**Toronto** $839,999

2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views


## Williamson & Westney



**Ajax** $849,000

3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home

## Rogers and Dufferin St



**Toronto** $849,999

3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom

## Markham Rd & Lawrence Ave



**Scarborough** $999,000

3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow

## Harmony Road / Conlin Road



**Oshawa** $999,000

4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom


## Cameo St / Burkolder Dr



**Pickering** $999,900

3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home


## Hwy10 / Hwy 89



**Shelburne** $999,900

5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

## Markham/Steeles



**Markham** $999,999

3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

## Markham Rd/ Lawrence Ave E

FOR LEASE




**Scarborough** $2,700

3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

## Markham Rd & Sheppard Ave

FOR LEASE



**Scarborough** $2,250

1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

## Simcoe St/ Windfields Farm Dr

FOR LEASE



**Oshawa** $1,500

1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

## Markham & Denison

FOR LEASE



**Markham** $1,450

1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

## ஜனாதிபதியுடன் தமிழ் - முஸ்லிம் அரசியல் கட்சிகளின் முக்கிய சந்திப்பு! தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டதற்கு ஜனாதிபதி அநுரா நன்றி தெரிவிப்பு!



தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு கடந்த 03 ஆகஸ்ட் 2026 திற்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. ஆறு தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் இணைந்து உருவாக்கிய கூட்டணியின் சார்பில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது புதிய அரசியலமைப்பை உருவாக்குதல், மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துதல், வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களின் நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தெரிவுக்குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தலை நடத்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்து அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்வு காண அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். புதிய அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, அரசியலமைப்பை திருத்துவதும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதும் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றாலும், அவசரமாக மாற்றங்களை மேற் கொள்வதை விட அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய புதிய மக்கள் இணக்கத்தை உருவாக்குவதே முக்கியம் என வலியுறுத்தினார். இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயல்படும் அரசியல் மற்றும் சமூக சூழலை உருவாக்க வேண்டிய அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் வடக்கு கிழக்கில் பொதுமக்கள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான நிலங்கள் இராணுவத்தினராலும் ஏனைய அரசு நிறுவனங்களினாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கொள்கை ரீதியாக அந்த நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உடன்பட்டிருந்தாலும், நடைமுறையில் தாமதம் நிலவுவது குறித்துச் சுட்டிக் காட்டப்பட்டதாகவும், நிலங்களை விடுவிப்பதில் உள்ள தடைகள் குறித்து இராணுவத்திடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறியதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டார். இவற்றுடன், மலையக மக்களுக்குச் சொந்தமான காணி உரிமை இன்னமும் கிடைக்கப் பெறாத நிலைமை குறித்தும், தோட்ட நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை மீட்டு மக்களுக்கு வழங்குவது தொடர்பிலும் பேசப்பட்ட போதிலும், அதற்கான முறையான பதில்களோ தீர்வுகளோ இன்னமும் எட்டப்படவில்லை என எம். ஏ. சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

மலையக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச் காணிக்கான சட்டபூர்வ உரிமையை வழங்கும் திட்டம், காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகள், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2027 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளில் 13,000 வீடுகள் அமைக்கும் திட்டம் உள்ளிட்ட பல அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி விளக்கமளித்தார்.

சந்திப்பின் இறுதியில், தமிழ் மொழி பேசும் மக்களின் பிரச்சினைகளை ஒருங்கிணைந்து முன்வைப்பதற்காக இந்த கூட்டணியை உருவாக்கிய அனைத்து பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். அதேவேளை, சமூகத்தில் தவறான புரிதல்கள் உருவாகாத வகையில் அனைத்து மக்களின் பொதுப் பிரச்சினைகளையும் முன்னிலைப்படுத்தி செயல்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இச்சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் அதன் தவிசாளர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.எம். தாஹிர், என்.பி.எம்.எம். தாஹிர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பில் செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன் முருகேசு சந்திரகுமார், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் எம்.ஏ. சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூ ப் ஹக்கீம் மற்றும் நிசாம் கரியப்பர், தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் வி. ராதா கிருஷ்ணன் மற்றும் பரத் அருள்சாமி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# உதயநிதி அப்படி என்ன தான் ஆபாசமாகப் பேசி விட்டார்?

எங்க தண்ணி வருதோ இல்லையோ அங்கு தண்ணி வரனும் – இது தான் தமிழக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆபாசப் பேச்சாம். இது வரை தமிழகத்தில் தற்குறி வாக்காளர்கள் இருந்தார்கள் என்று பார்த்தால் இந்தச் சம்பவம் தற்குறி ஊடகவியலாளர்கள், தற்குறிக் காவல் துறையினரும் இருக்கின்றார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

இவ் வசனங்களைக் குறிப்பிட்ட மறுகணமே அடுத்து அவர் கூறியது காவிரியைச் சொன்னேன். அதுவரை அவர் காவிரிப் பிரச்சனை பற்றி பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஆதரவாளர்கள் சிலர் த்ரிஷா த்ரிஷா என்று கூக்குரல் இடுகின்றார்கள். உதயநிதி ஸ்டாலின் தனது உரையில் எங்கும் த்ரிஷாவைப் பற்றி இக்காணொளியில் குறிப்பிடவில்லை.

இதை விட மிகவும் கீழ்த்தரமாக மாறி மாறி திமுக, அதிமுக, ஏனைய கட்சியினர் வசை மாரி பொழிந்திருக்கின்றார்கள். அவர்கள் மீது யாரும் வழக்குகள் தாக்கல் செய்யவில்லை. ஏனென்றால் தேர்தலில் இவையெல்லாம் சகஜம் என்று அப்படியே கேட்டுப் புறக்கணித்துச் சென்று விடுவார்கள். ஆனால் இன்றுள்ள இன்ஸ்டாகிராம் ஆதரவாளர்கள் சிந்திப்பதில்லை. ரீல்ஸ் போடுபவர்கள், தேவையில்லாமல் வழக்குப் பதிவு செய்து தமிழகத்துக்கு எவ்வளவு நட்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். உதயநிதி ஸ்டாலின் இவ் விடயத்தில் பொறுப்புள்ள எதிர்கட்சித்



தலைவராகச் செயற்பட்டிருக்கின்றார். அவரது ஆதரவாளர்களின் செயல்களுக்கு அவர் எப்படி பொறுப்பெடுக்க முடியும்? த்ரிஷா த்ரிஷா என்று ஆதரவாளர்கள் சிலர் கூக்குரல் இட்டபோதும் அவர் த்ரிஷா பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. இந்நிலையில் பெண்களை அவமதித்தாக, ஆபாசத்தைக் கட்டவிழ்த்து விட்டதாகச் சமூக ஊடகங்களில் ஒரே கூப்பாடு!

உதயநிதி ஸ்டாலின் தமிழகத்து வர வேண்டிய காவிரித்தண்ணீர் வரவில்லையே என்பது பற்றிய ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றுகின்ற்றார். வரவேண்டிய தண்ணீர் வரவில்லை என்பது பற்றிய உரை. எனவே வர வேண்டுய தண்ணீர் வரவில்லை. அதைக் குறிப்பிட்டு 'எங்க தண்ணி வரவில்லையோ அங்கு தண்ணி வரனும்' என்று குறிப்பிட்டிருக்கலாம் அல்லவா. உண்மையில் வந்திருக்க வேண்டிய காவிரித் தண்ணீர் இன்னும் வர வேண்டிய இடத்தில் வரவில்லை. அதைத் தான் அவர் அங்க என்று குறிப்பிடிருக்கின்றார். ஆனால் ரீல்ஸ் ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், காவல் துறையினர் அதிகம் அங்கு பார்ப்பது பாலியல் காட்சிகளைத்தாம். இதனால் தண்ணி அவர்களுக்கு அவர்களுக்குப் புரிந்த தண்ணி நினைவு க்கு வந்து விட்டது. உதயநிதி தனது உரையில் காவிரித் தண்ணீர்ப் பிரச்சனை பற்றித் தான் பேசுகின்றார். இடையில் கூட்டத்தில் சிலர் த்ரிஷா என்றதும் அடுத்து அவர் பேசிய தண்ணிச் சொற்பதம் இவர்களுக்குத் தெரிந்த தண்ணியை நினைவுட்டி விட்டது. தற்குறிகள் ஆட்சியில் அரசன் எவ்வழி! குடிகள் அவ்வழி! ஒரு காலம் தமிழகத்தில் அண்ணா போன்றவர்களின் நீண்ட , பொருள் பொதிந்த உரைகளையெல்லாம் கேட்டு மகிழ்ந்த மக்கள் இருந்தார்கள். இன்று மிகவும் சாதாரணமான ம் உரையுடன் பொருந்தும் வசனங்களுக்குக் கூட அர்த்தத்தை வலிந்து திணிக்கின்றார்கள்.

கலைஞர் சிலேடையாகப் பேசுவதில், உரையாடுவதில் வல்லவர். உதயநிதி ஸ்டாலின் சிலேடையாகப் பேசுவதில் வல்லவர். சிலேடையாக எழுதுவது தமிழ் இலக்கியத்தில் ஓர் அம்சம். அது ஒரு திறமை. உதயநிதி ஸ்டாலின் காவிரித்தண்ணீர் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றார். அப்போது சிலேடையாக உதிர்த்த வார்த்தைகள் இவை.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் நின்று பிடிக்காது. வழக்கில் தீர்ப்புக் கூறும் நீதிபதிகள் நிச்சயம் , இதனை ஊதிப் பெருப்பித்து வலிந்து பொருள் கண்டு எதிர்கட்சித்தலைவரைக் கைது செய்த காவல்துறை அதிகாரிகளையும் தண்டிக்க வேண்டும். ஏனென்றால் இதன் மூலம் மிகப்பெரும்பொருள்ரீதியிலான நட்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

இது போன்ற தமிழக அரசின் செயற்பாடுகள் திமுகவின் செல்வாக்கை அதிகரிக்கவே செய்யும். குறிப்பாக சட்டசபையில் நடைபெறவிருக்கும் வரவு செலவு விவாதத்தை அனைவரும் கூர்ந்து அவதானிக்க வைக்கும்.

நன்றி:- கிரிதரன் முகநூல் பதவிவு

# என்னைப் பற்றி அவதூறு பரப்பியோரை ஐகோர்ட் உத்தரவிட்டும் கைது செய்யாதது ஏன்? சீமான் கேள்வி!

காலை 9.00 மணிக்குப் புகார் கொடுத்து இரண்டு மணி நேரத்தில் முற்பகல் 11.00 மணிக்கெல்லாம் உதயநிதியைக் கைது செய்கிற காவல் துறையினர், என்னைப் பற்றி அவதூறுப் பரப்பியவர்களை மதுரை உயர் நீதிமன்றக் கிளையின் நீதியரசரே சட்ட நடவடிக்கை எடுக்கச் சொல்லி, உத்தரவிட்டப் பிறகும் கைது செய்யாது காப்பாற்றுவது ஏன்? என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'காவிரி நதிநீர்ச் சிக்கல் உச்சம் பெற்று மேகேதாட்டுவில் அணை கட்டுவதில் மிகுந்த முனைப்போடு, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, கர்நாடக அரசும், அங்குள்ள எதிர்க்கட்சிகளும் ஒருமித்துச் செயல்பட்டு முன்னெடுப்புகளைச் செய்து வரும் நிலையில், தமிழ்நாட்டில் அரங்கேறி வரும் அரசியல் காட்சிகள் மிகுந்த ஏமாற்றத்தைத் தருகின்றன.

ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் சேர்ந்தது தான் அரசாங்கம் எனும் அடிப்படையை மறந்து இருவரும் பகைமை பாராட்டுவதும், காழ்ப்புணர்ச்சியோடு செயல்படுவதும், அரசியல் பழிவாங்கல் செய்வதும்தான் ஆட்சி நிர்வாகமா? மக்களுக்கான அரசியலா? என்ற கேள்வி எழுகிறது. தற்போது நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்குமான தலைகுனிவாகும்.

காவிரி நதிநீர் சிக்கல் தொடர்பாக திமுக நடத்திய ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்வைத்த சில கருத்துகள் தேவையற்றவை. எதிர்க்கட்சித் தலைவர் எனும் பதவிக்குரிய மாண்பை மறந்து, கண்ணியக் குறைவான கருத்துக்களை பொது அவையில் வைத்திருக்க வேண்டியதில்லை. அதேசமயம், இதனையே வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, கைது நடவடிக்கை எனும் பெயரில் தவெக அரசு இறங்குவதும் ஏற்புடையதல்ல. அரசியல் மேடைப் பேச்சுக்கெல்லாம், தவெக அரசு கைது நடவடிக்கை எடுக்குமென்றால், என் மீதும், என் தம்பி, தங்கைகள் மீதும் தனிநபர் விமர்சனமும், அவதூறும், ஆபாசத்தாக்குதலும் நாள்தோறும் தொடுக்கும் தவெகவினர் மீது எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்காதது ஏன்?

அவ்வாறு அவதூறு பேசுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, மதுரை உயர் நீதிமன்றக் கிளையின் நீதியரசரே, சட்ட நடவடிக்கை எடுக்கச் சொல்லி, உத்தரவு கொடுத்துவிட்டப் பிறகும், கைது செய்யாது விட்டிருப்பதேன்? அவர்கள் தவெகவின் ஆதரவாளர்கள் என்பதாலா? .

காலை 9 மணிக்குப் புகார் கொடுத்து, இரண்டு மணி நேரத்தில் முற்பகல் 11 மணிக்கெல்லாம் உதயநிதியைக் கைது செய்கிற காவல்துறையினர், என்னைப் பற்றி அவதூறுப் பரப்பியவர்களை இத்தனை நாட்களாகியும் கைது செய்யாது, காப்பாற்றுவது ஏன்?

என்னைப் பற்றி மேடையில் 'சீமான் பழைய சாமான்' என்று தரம்தாழ்ந்து பேசிய லயோலா மணி மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? அப்படி பேசியதை ஊக்கப்படுத்தும் விதமாக பாடநூல் கழகத் தலைவராக அரசுப் பதவி கொடுத்து அழகு பார்ப்பதற்கு பெயரென்ன முதல்வரே? இது தான் உங்களின் நாகரீக அரசியலா?

என் மீதும், என் தம்பிகள் மீதும் கடந்த காலத்தில் முந்தைய திமுக அரசு பாய்ச்சாத வழக்குகள் இல்லை. ஏவிவிடாத கைது நடவடிக்கைகள் இல்லை. ஏறக்குறைய 200க்கும் மேற்பட்ட வழக்குகளை திமுகவின் ஆட்சியிலேயே தான் பெற்றிருக்கிறேன். எல்லாவற்றிற்கும் கைது என்று முந்தைய திமுக அரசு, கடைப்பிடித்த அதிகார அடக்குமுறையையே தவெக அரசும் கடைப்பிடிக்குமென்றால், இது தான் சனநாயக ஆட்சியா? இதுதான்



மக்களுக்கான மாற்று அரசியலா? மக்களுக்குத் துளியும் நலன்பயக்காத, தரம் தாழ்ந்த அரசியல் நடைபெற்று வருவதைப் பார்க்கிறபோது மனவலியைத் தருகிறது. முந்தைய திமுகவின் ஆட்சிபோலவே, எல்லாவற்றிற்கும் கைது என தவெகவின் அரசு கிளம்புவது துளியும் சகிப்புத்தன்மையற்ற போக்காகும்.

மேடைதோறும் திமுகவை தீயசக்தியென விமர்சித்து விட்டு, திமுக கடந்த காலத்தில் செய்த கொடுங்கோன்மையை நிகழ்காலத்தில் தவெக அரசு கட்டவிழ்த்து விடுவது எந்தவிதத்தில் மாற்று அரசியலாகும்? . திருவைகுண்டம் தொகுதியின் தவெகவின் சட்டப்பேரவை உறுப்பினர் சரவணன் மீதும், இன்னபிற தவெகவின் நிர்வாகிகள் மீதும் பாலியல் புகார்கள் பொதுவெளியில் முன்வைக்கப்பட்டு, இதுவரை விசாரணை செய்யாத நிலையில், இந்த விவகாரத்தில் மட்டும் இவ்வளவு வேகம் காட்டுவதேன்? காவிரி நதிநீர் விவகாரத்தில் காட்டாத வேகத்தை, கைது நடவடிக்கைக்கு முதல்வர் விஜய் காட்டுவது ஏன்?

காவிரிப்படுகையில் குறுவை சாகுபடிப் பொய்த்து, சம்பா சாகுபடியும் கேள்விக் குறியாகியிருக்கும் நேரத்தில், அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, காவிரி நதிநீர் விவகாரத்தில் செய்ய வேண்டிய ஆக்கப்பூர்வ முன்னெடுப்புகளைச் செய்யாது, தவெக அரசு தான்மையுடன் வறட்டுத்தனமான செயல்பாடுகளில் ஈடுபட்டு, தமிழ்நாட்டின் கவனத்தை ஒட்டுமொத்தமாகத் திசை திருப்பி இருப்பது வெட்கக்கேடானது.

காவிரி நதிநீர் விவகாரத்தில் காட்டாத வேகத்தை கைது நடவடிக்கைக்கு ஆளுங்கட்சி காட்டுவதும், காவிரிக்காக தீவிரமாக போராட வேண்டிய சமயத்தில் எதிர்க்கட்சியான திமுக கைதுக்கு எதிராக போராடிக் கொண்டிருப்பதுமான தமிழ்நாட்டின் அரசியல் நிலை சாபக் கேடானதாகும் என்றார்.

# இலங்கையில் நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் 2 முன்னாள் அதிஉயர் அதிகாரிகளுக்கு மரணதண்டனை! - இதோ முழுவிபரம்



ஈஸ்டர் தாக்குதல் குறித்து முன் கூட்டியே உளவுத்துறை எச்சரித்திருந்த போதிலும், நடவடிக்கை எடுக்கத் தவறியமை உள்ளிட்ட மூன்று குற்றச் சாட்டுகளில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி யுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவம் நடக்கவிருப்பதாக புலனாய்வுத் தகவல் கள் கிடைத்திருந்த போதிலும், அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமை, கடமை பொறுப்பு களை தவறியமை, மனித படுகொலை க்கு ஆதரவு வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர அடையாளம் காணப்பட் டதை அடுத்தே இந்தத் தீர்ப்பு வழங்க ப்பட்டுள்ளது.

பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய, திலக்கரத்ன பண்டார ஆகிய மூவர டங்கிய மேல் நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த விசாரணைகள் நடந்தன. இந்த வெடிகுண்டுத் தாக்கு தல் சம்பவத்தில் பூஜித் ஜயசுந்தர குற்றவாளி என்று பிரியந்த லியனகே, திலக்கரத்ன பண்டார ஆகிய பெரும் பான்மை நீதிபதிகள் தீர்ப்பை அறிவித் துள்ளனர்.

பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்ப்பை, மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாமின் தலைவர் நீதிபதி பிரியந்த லியனகே அறிவித்தார். அதில், "ஈஸ்டர் வெடி குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட இருப்பதாக முன்னரே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அது தொடர்பில் எந்தவித நடவடி க்கைகளையும் எடுக்கத் தவறியமையின் ஊடாக, கடமைகளைத் தவறியுள்ளமை யால், 268 பேர் உயிரிழந்ததுடன், 586 பேர் காயமடைந்திருந்தனர்' என்று தெரிவித்தார்.

மேலும், 'இந்தக் காலப் பகுதியில் நாட்டின் பொலிஸ் மாஅதிபராக பிரதிவாதி பூஜித் ஜயசுந்தர கடமை யாற்றியிருந்தார். பிரஜைகளை பாது காக்கின்றமை, பொது மக்கள் பாது காப்பு ஆகியவை இவரது பொறுப்பு. எனினும், ஈஸ்டர் தினத்தில் கொழும்பு மற்றும் சனநெரிசல் அதிகமான பகுதி களிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்களை இலக்கு வைத்து தற்கொலை குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட இருப்பதாக 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் தேதி மாலை அப்போதைய புலனாய்வு சேவை பணிப்பாளர் நிலங்க ஜயவர்தனவால் இந்தப் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டிரு ந்தது' என்று குறிப்பிட்டுள்ளார் நீதிபதி பிரியந்த லியனகே.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் தேதி இலங்கையின் கிறிஸ்தவ தேவால யங்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் அதிகளவில் நடமாடும் முன்னணி ஹோட்டல்களை இலக்கு வைத்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப் பட்டது.

அத்துடன் உளவுத் தகவல் கிடைத்தி ருந்த போதிலும், அதைத் தடுப்பதற்கு இவர் எந்தவித நடவடிக்கைகளையும்



எடுக்கவில்லை எனவும், குற்றங்களைத் தடுப்பதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப் பட்ட அதிகாரி என்ற வகையில் அவர் தமது பொறுப்பைத் தவறவிட்டு உள்ளதாகவும் நீதிபதி பிரியந்த லியனகே தீர்ப்பில் அறிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு மரண தண்டனை வழங்கும் தீர்ப்பு அறி விக்கப்பட்டது. ஆயினும், மூவரடங்கிய நீதிபதிகள் குழாமிலுள்ள மற்றைய நீதிபதி விராஜ் வீரசூரிய தனது தனிப்பட்ட தீர்ப்பை அறிவித்துள்ளார்.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிரதிவாதி மீதான குற்றச்சாட்டுகள் சாதாரண சந்தேகத்திற்கு அப்பால் சென்று உறுதி செய்யப்படாமையால் அவரை விடுதலை செய்வதாக அறிவித்துள்ளார்.

மேலும் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக முன்கூட்டியே உளவுத்துறையின் எச்சரிக்கை கிடை த்திருந்த போதிலும், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை, கடமையை அலட்சியம் செய்தமை, கொலைக்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளில் குற்றவாளி யாகக் காணப்பட்ட முன்னாள் பாது காப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு, கொழும்பு விசேட மூவர் நீதிபதிகள் கொண்ட விசாரணை அமர்வின் பெரும்பான்மை நீதிபதிகள் ஜீலை 31ஆம் தேதி மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளனர்.

இலங்கையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி அனுஷ்டிக்கப்பட்ட ஈஸ்டர் தினத்தில் இந்தத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டிருந்தன. மூன்று கிறிஸ் தவ தேவாலயங்கள், நட்சத்திர ஹோட் டல்கள் ஆகியவற்றை இலக்கு வைத்து இந்தத் தற்கொலை குண்டுத் தாக்குதல் கள் நடாத்தப்பட்டிருந்தன.

இந்தத் தாக்குதல்களில் 268 பேர் பலி யானதுடன், 586 பேர் காயமடைந்தனர். தேசிய தவ்ஹீத் ஜமாஆத் அமைப்பால் இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகப் பின்னர் உறுதி செய்யப்பட்டது.

எட்டு தற்கொலை குண்டுதாரிகளால் நடாத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், 40 வெளிநாட்டவர்களும், 45 சிறார்களும் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வந்த விசாரணைகளின் அடிப்படையிலேயே பூஜித் ஜயசுந்தரவு க்கு மரண தண்டனை வழங்கப்பட்டு ள்ளது.

இலங்கையில் நடந்து வந்த 30 ஆண்டு க்கால யுத்தம் 2009ஆம் ஆண்டு மே 18ஆம் தேதி முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, இலங்கையில் நடாத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலாக 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல் கருதப்படுகிறது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பின்னணி முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும் - ரஞ்சித் மத்தும பண்டார கோரிக்கை!

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்கப் பட்டுள்ள போதிலும், இத்தாக்குதலைத் திட்டமிட்டவர்கள், நிதியுதவி செய்தவர் கள் மற்றும் இதன் பின்னணியில் இருந்த உண்மையான குற்றவாளிகள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப் பட வேண்டும். இத்தாக்குதலால் இரு பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்கு வங்கியை இழந்து அரசியல் ரீதியாகத் தங்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டு ள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் 01 ஆகஸ்ட் 2026 சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் இத்தாக்குதலுக்கு ஜே.வி.பி கட்சியுடன்



தொடர்புடைய வேட்பாளர் ஒருவர் நிதியுதவி செய்துள்ளமை சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்பினும், தாக்குதலுக்கு நிதியுதவி செய்த இப்ராஹிம் உள்ளிட்ட முக்கிய குற்றவாளிகள் மற்றும் இதன் பின்னணியில் இருந்து பயனடைந்தவர் கள் மீது ஏன் இதுவரை முழுமையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

இத்தாக்குதலில் கத்தோலிக்க மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்பட்டனர். அதேபோல, 2019 மற்றும் 2024 ஆகிய இரு ஜனாதிபதித் தேர்தல்களிலும் தேசிய பாதுகாப்பு என்ற விவகாரத்தை மைய ப்படுத்தித் எங்களின் வாக்குகள் பெரு மளவில் கை நழுவிச் சென்றதால், அரசியல் ரீதியாகத் எங்களுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டுத் நாங்களும் இதில் ஒரு பாதிக்கப்பட்ட தரப்பாகவே இருக்கின் றோம்.

நல்லாட்சி அரசாங்கத்தின் போதே விசாரணைகள் தொடங்கப்பட்ட போதி லும், 52 நாள் அரசாங்க மாற்றத்திற்குப் பிறகு சட்ட ஒழுங்கு அமைச்சு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கட்டுப் பாட்டிலேயே இருந்தது. எனவே, இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியோ பொறுப்பேற்க முடியாது. தாக்குதலைத் தடுக்கத் தவறியதற்காகவே பொலிஸ் அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்கப் பட்டுள்ளதே தவிர தாக்குதலை நடத்திய வர்கள் இன்னும் முழுமையாகத் தண்டி க்கப்படவில்லை என்றார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு பயங்கர வாதத் தாக்குதலுடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபர்கள் மற்றும் இதன் பின்னணியில் இருந்த பிரதான சூத்திரதாரி யார் என்பது குறித்த உண்மைகள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும். பிரதான சூத்திரதாரி யார் என்பது இனங்காணப்படும் வரை மக்கள் மனதில் பலவிதமான சந்தேகங் களும் எண்ணங்களும் எழுவது இயல்பானதாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபிர் ஹசீம் தெரிவித்தார்.

# ஓய்வு ஊதிய வயதை 5 ஆண்டுகள் முன்னோக்கி நகர்த்தினால் மக்களின் மன அழுத்தம் குறையும் - பீல்ட்மார்ஷல் சரத் தெரிவிப்பு!

ஓய்யு ஊதிய வயதை மேலும் 05 ஆண்டுகள் முன்னோக்கி நகர்த்துவதன் மூலம் மக்களின் மன அழுத்தத்தைக் குறைக்க முடியும் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

மகத்தான தேசம் மற்றும் தலைமுறைக்காக முன்னிற்போம் எனும் தலைப்பில் கடந்த 26 யூலை 2026 ஞாயிற்றுக் கிழமை கேகாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:



பிரதம நீதியரசரைத் தொடர்ந்து பதவியில் வைத்திருக்க வேண்டும் என்றும், சட்டத்தரணிகளின் சேவைக் காலத்தை நீடிக்க வேண்டும் என்றும் சிலர் கூறும் கருத்துக்களுக்கு நான் முழுமையாக உடன்படுகின்றேன்.

நமது நாட்டின் இராணுவ வீரர்களாகச் சேவை செய்யும் வீரர்கள் 20 ஆண்டுகள் சேவைக் காலத்துக்குப் பின்னர் ஓய்வுபெற வேண்டியுள்ளது. அவர்கள் சுமார் 45 வயதில் ஓய்வுபெறும் கால கட்டத்தில் தான் வாழ்க்கையில் பல் வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

அந்த வயதில் அவர்களின் பிள்ளைகள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். மேலும், அந்த வயதில் அவர்களுக்குப் புதிதாக வேறு ஒரு வேலையைப் பெற்றுக் கொள்வதும் கடினமாகும். ஆனால் அவர்கள் அந்த வயதிலேயே இராணுவப் பணியிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

அதேபோல இராணுவ அதிகாரிகள் 50 அல்லது 55 வயதில் ஓய்வுபெறுகின்றனர். அந்தச் சமயத்திலும் அதிகாரிகளின் பிள்ளைகள் சாதாரண தர அல்லது உயர்தரப் பரீட்சைகளில் படித்துக் கொண்டிருக்கின்றனர். அரசாங்க ஊழியர்கள் 60 வயதில் ஓய்வு பெறும்போதும் அவர்களின் பிள்ளைகள் பாடசாலைக்கே சென்று கொண்டிருக்கின்றனர். எனவே, உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளைப் போல இந்த ஓய்வு ஊதிய வயதை மேலும் ஐந்து ஆண்டுகள் முன்னோக்கி நகர்த்தினால் மக்களின் மன அழுத்தம் குறையும். மனிதர்களால் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்ற முடியும். நான் இராணுவப் பணியிலிருந்து விலகி இப்போது 20 ஆண்டுகள் ஆகின்றன. இருப்பினும் எனது மூளை இன்னமும் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றது. எனது கண், காது, மூக்கு உட்பட அனைத்து உறுப்புகளும் சரியாகவே இயங்குகின்றன. இப்போது எனக்கு மீண்டும் இராணுவப் பொறுப்பை வழங்கினாலும் என்னால் அதைச் சிறப்பாக வழிநடத்த முடியும். ஆனால் நான் அதை ஒருபோதும் மீண்டும் பெற்றுக்கொள்ளப் போவதில்லை.

அமெரிக்கா போன்ற நாடுகளில் 70 வயது வரை கூட இராணுவத் தளபதிகளாகப் பணியாற்றுகின்றனர். சில நாடுகளில் நீதிபதிகள் 70 வயதிலேயே ஓய்வு பெறுகின்றனர். அப்படியிருக்கையில் நமது நாட்டு மக்களுக்கு மட்டும் ஏன் இதில் இவ்வளவு தயக்கம் இருக்கிறது என்று தெரியவில்லை. பழைய கலாசாரத்தில் சுகபோகமாக வாழ்ந்தவர்களே இவ்வாறான திட்டங்கள் சரியான பாதைக்கு வருவதை விரும்புவதில்லை என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிப்பது தனிநபர் ஒருவரை இலக்கு வைத்த நடவடிக்கை அல்ல. நாட்டின் இலட்சக்கணக்கான மக்களின் வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்தி நீதியை நிலைநாட்டுவதற்காகவே இத்தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அதேவேளை நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராகவும் நீதிபதிகளுக்கு எதிராகவும் கருத்துக்களை வெளியிட்டு வரும் எதிர்க்கட்சியினரே நீதித்துறைக்கு உண்மையான அழுத்தங்களை வழங்கி வருவதாகவும் அவர் விசனம் வெளியிட்டார்.

பொலிஸாரைத் தாக்கி கொலை மிரட்டல் விடுத்த குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றம் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. 2019இல் நடந்த இச் சம்பவம் தொடர்பில் இருதரப்பு விசாரணைகளையும் விரிவாக முன்னெடுத்த பின்னரே நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியது. ஆனால், இந்தத் தீர்ப்பிற்கு எதிராக எதிர்க் கட்சித் தலைவர் பகிரங்கமாகப் பேசுவது நீதித் துறையை பலவீனப்படுத்தும் செயலாகும். சுயாதீனமாகச் செயற் படும் நீதிபதிகள் மீது குற்றச்சாட்டு களைச் சுமத்துவதும், நிந்திப்பதும் நீதித் துறைக்குச் செய்யப்படும் அவமதிப்பாகும். உயர் நீதிமன்ற வெற்றிடங்களும் விரைவில் நிரப்பப்படும். இதன் ஒரு அங்கமாகவே, நீதவான் நீதிமன்றங்கள் முதல் உயர் நீதிமன்றம் வரை தற்போது சேவையாற்றும் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# நீதிபதிகளின் பணிக்கால நீட்டிப்பு:- அநுர அரசின் உள்நோக்கமும் எதிர்ப்புக்களும் நியாயங்களும்

இலங்கையில் நீதிபதிகள் ஓய்வு பெறும் வயதெல்லையை இரண்டாண்டுகள் நீட்டிப்பதற்கான அரசாங்கத்தின் நியாயப்பாடுகளும், எதிர்த்தரப்புக் கூறும் நீதித்துறைச் சுதந்திரமும் அப்பிரச்சினையின் ஒரு பக்கத்தை மட்டுமே மக்களுக்குக் காட்டுகின்றன. ஆனால் இங்கு காட்டப்படாத இன்னொரு பக்கம் அல்லது இருதரப்பாலும் கூறப்படாத வேறு சில காரணங்களும் உண்டு.

17 நீதியரசர்களைக் கொண்டிருக்க வேண்டிய உச்ச நீதிமன்றக் குழாமில் தற்போது 13 பேரே உள்ளனர். இவர்களுள் தற்போதைய பிரதம நீதியரசர் மைத்திரி சிறிசேனாவினால் உச்ச நீதிமன்றுக்கு நியமிக்கப்பட்ட ஒருவர். பின்னர் பிரதம நீதியரசராக அனுரவினால் நியமிக்கப்பட்டவர். மூப்பு அடிப்படையில் அடுத்துள்ள 7 பேரும் கோட்டாபயவினால் நியமிக்கப்பட்டவர்களாவர். மிகுதி 5 பேரும் கடந்த ஆண்டில் அனுரவினால் நியமிக்கப்பட்டவர்கள். எனவே கோட்டாபய காலத்தில் நியமனம் பெற்ற ஒருவர் பிரதம நீதியரசராக நியமிக்கப்படுவதினால் தற்போதுள்ள முக்கிய வழக்குகள் தொடர்பில் ஏற்படக்கூடிய ஐயங்களே தற்போதைய நீதியரசரை தொடர்ந்து அப்பதவியில் தக்கவைக்க வேண்டிய நிலைக்கு அனுர தரப்பைத் தள்ளியுள்ளது என்பது தான் இப்பிரச்சினையின் அரசாங்கத் தரப்பின் மறுபக்கம்.

அனுர தரப்பினரின் இந்த ஐயம் மறுபுறத்தில் தமக்கு வாய்ப்பாக அமையக் கூடும் என்ற எதிர்பார்ப்பே எதிர்க்கட்சிகளின் மறுபக்கம். அதாவது கோடாபயவினால் நியமனம் பெற்ற ஒருவர் பிரதம நீதியரசாக வந்தால் தமக்கு சார்பான நிலைமை உருவாகலாம் அல்லது உருவாக்க முடியும் என்பது தற்போது மிக மோசமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வரும் எதிர்க்கட்சிகளின் எதிர்பார்ப்பாகும். அனுர தரப்பினரின் இவ்வகையான ஐயமோ அல்லது எதிர்க்கட்சிகளின் இவ்வகையான எதிர்பார்ப்போ உண்மையாக இருக்குமானால் அது இலங்கையின் நீதித்துறை தொடர்பான மக்களின் ஐயமாக இருக்கும்.

இன்று இவ்விடயத்தை மையமாக வைத்து நீதித்துறைச் சுதந்திரம் தொடர்பில் குரல் எழுப்பும், கூட்டம் கூடும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் உண்மையில் அதற்கான தார்மீக உரிமை உடையவர்கள் தானா? கடந்த காலத்தில் நீதித்துறையில் மிகமோசமான தலையீடுகளைச் செய்தவர்கள், தமக்கேற்றவகையில் அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்தவர்கள், அவ்வாறான செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்கியவர்கள் தான் இப்போது நீதித்துறையின் சுதந்திரத்தைக் காப்பாற்றப் புறப்பட்டுள்ளார்கள்.

திவிநெகும'சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது என அரசியலமைப்பையும் நீதித்துறையின் சுதந்திரத்தையும் நிலைநிறுத்திய முன்னாள் பிரதம நீதியரசி ஷிராணி பண்டாரநாயகவை பதவியிலிருந்து அகற்றிய ராஜபக்ஷக்களும் அவர்களுக்கு சாமரம் வீசிய ஜீ.எல.பீரிஸ், ரவுப் ஹக்கீம் உதய கம்மன்பில, விமல் வீரவன்ச மற்றும் இன்றுவரை கோட்டாபயவுக்குக் குடை பிடித்துவரும் அலிசப்ரி போன்றோர் நீதித்துறை சுதந்திரத்தைக் காப்பாற்றப் போகிறோம் என்றால் அதனை நம்புவதற்கு மக்கள் இன்னும் பழையவற்றை மறக்கவில்லை. அத்துடன் இவர்களுக்கும் இதைவிட்டால் அரசியல் செய்வதற்கு இப்போது வேறொன்றும் இல்லை.



நீதிபதிகள் ஓய்வுபெறும் வயதெல்லையை இரண்டாண்டுகள் நீட்டிப்பதற்கான அரசாங்கத்தின் நியாயப்பாடுகளும், எதிர்த்தரப்புக்கூறும் நீதித்துறைச் சுதந்திரமும் அப்பிரச்சினையின் ஒரு பக்கத்தை மட்டுமே மக்களுக்குக் காட்டுகின்றன. ஆனால் இங்கு காட்டப்படாத இன்னொரு பக்கம் அல்லது இருதரப்பாலும் கூறப்படாத வேறு சில காரணங்களும் உண்டு. அனுர தரப்பினர்க்கு தற்போதைய பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேனவைத் தொடர்ந்து ஒரு சில ஆண்டுகளுக்காவது அவரது பதவியில் தக்க வைத்திருக்க வேண்டிய தேவை உள்ளது. முன்னைய ஆட்சியாளர்களின் முறைகேடுகள் தொடர்பான வழக்குகளைத் தங்கு தடையின்றி உரியமுறையில் நகர்த்துவதற்கு அவர்களுக்கு இசைவானவராக தற்போதைய பிரதம நீதியரசர் இருந்து வருகிறார்.

அவர் ஓய்வு பெற்றால் சேவை மூப்பு அடிப்படையில் அடுத்த பிரதம நீதியரசராக கோட்டாபய காலத்தில் உச்ச நீதிமன்ற நீதியரசர்களாக நியமனம் பெற்ற ஒருவரே அதுவும் மூப்பு அடிப்படையில் யசந்த கொட்டகொடவையே அனுர நியமிக்கவேண்டியிருக்கும். அத்துடன் அவர் நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினரும் ஆவர்.

அரசாங்கத்தின இப்புதிய முன்மொழிவு தொடர்பாக எதிர்தரப்பு கூட்டாக முன்வைக்கும் முக்கியமானதொரு கோரிக்கை இது தொடர்பாக மக்கள் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது. இலங்கையின் அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்போது குறிப்பிட்ட சில விடயங்களுக்கு மட்டும் மக்கள் கருத்துக்கணிப்பு கட்டாயம் மேற்கொள்ளப்படவேண்டும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நீதிபதிகளின் வயது அதிகரிப்பது உட்பட நீதித்துறை சார்ந்த எந்தவொரு உறுப்புரையும் அவற்றில் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் அரசாங்கத்துக்கு அவ்வாறான சட்டக் கடப்பாடு எதுவும் கிடையாது.




# ரணில் - சஜித் - நாமல் கூட்டுச் சேர்க்கை மக்கள் நலனுக்கானதல்ல! அதிகாரத்தைக் கைப்பற்றவே சுயநலக் கூட்டு! - இளைஞர்கள் அமைப்பு



நாட்டில் மக்கள் எதிர்கொள்ளும் கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கோ அல்லது அன்றாடப் பிரச்சினைகளுக்கோ தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக அன்றி, தங்களது அடுத்தகட்ட அதிகாரக் கைப்பற்றல் திட்டத்திற்காகவும் சுய நல அரசியலுக்காகவுமே எதிர்க்கட்சிகள் மீண்டும் ஒன்றிணைந்து வருவதாக மாற்றத்துக்கான இளைஞர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

வெலிமடை பகுதியில் அமைப்பை கட்டியெழுப்பும் இளைஞர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போது எதிர்க்கட்சிகள் மத்தியில் புதிய கூட்டணிகள் மற்றும் சேர்க்கைகள் தொடர்பான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. ஒருபுறம் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச உள்ளிட்ட குழுவினர் பல்வேறு தரப்பினருடன் மீண்டும் ஒன்றிணைந்து வருகின்றனர். மறு புறம் நாமல் ராஜபக்ஷவை சுற்றியும் ஒரு குழு உருவாகி வருவதைக் காண முடிகின்றது.

ஆனால் இவர்கள் அனைவரும் கடந்த காலத்தில் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட, வீதிகளில் இறங்கி மக்களால் ஆட்சியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அரசியல்வாதிகளே ஆவர். இவர்கள் அனைவரும் மக்களால் நிராகரிக்கப்பட்ட பழைய அரசியல் கொள்கைகளையே மீண்டும் தூக்கிப் பிடித்துக் கொண்டு பயணிக்க முனைகின்றனர்.

இன்றைய சூழலில் நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பு, வரிகளின் சுமை, சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகள், மின்சார மற்றும் நீர் கட்டண உயர்வு, எரிபொருள் விலை உயர்வு மற்றும் கல்வித் துறை சார்ந்த சிக்கல்கள் எனப் பொது மக்கள் சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில், மக்களுக்காகக் குரல் கொடுப்பதற்காகவோ அல்லது அவர்களின் சுமையைக் குறைப்பதற்காகவோ இந்த எதிர்க்கட்சிகள் ஒன்றிணையவில்லை.

பாராளுமன்றத்திற்குள்ளோ அல்லது அதற்கு வெளியிலோ பொதுமக்கள் சந்திக்கும் பிரதான பிரச்சினைகள் தொடர்பில் இந்த எதிர்க்கட்சிகளின் உண்மையான தலையீடுகளையோ அல்லது மக்கள் நலன்சார்ந்த நிற்பையோ காண முடிவதில்லை. அடுத்த சந்தர்ப்பத்தில் ஆட்சியை எவ்வாறு கைப்பற்றுவது என்ற தங்களது சொந்த அரசியல் திட்டத்துக்காகவே இவர்கள் கைகோர்க்கின்றனர்.

2022 ஆம் ஆண்டில் பொதுமக்கள் வீதிக்கு இறங்கி நிராகரித்த அனைத்துக் கழிவுகளும் மீண்டும் ஒரே இடத்தில் சேர்வது, பேரை ஏரியில் கழிவுகள் அனைத்தும் ஒன்று திரள்வதைப் போன்றதாகும். இத்தகைய சுயநல எதிர்க்கட்சிக் கூட்டணியுடன் எங்களுக்கு எவ்வித தொடர்போ, உடன்பாடுகளோ அல்லது ஒப்பந்தங்களோ கிடையாது.

இன்றைய சூழலில் மக்களுக்குத் தேவை பழைய அரசியல்வாதிகளை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவது அல்ல, மக்களுடன் நின்று போராடும், மக்களின் உண்மையான பிரச்சினைகளைப் பேசும் ஒரு புதிய மற்றும் உண்மையான மாற்று எதிர்க்கட்சியாகும். அத்தகையதொரு மாற்று எதிர்க்கட்சியைக் கட்டியெழுப்பும் நோக்கிலேயே கடந்த தேர்தல்களில் நாங்கள் மக்களிடம் கோரிக்கைகளை முன்வைத்தோம்.

தோல்வியடைந்து, மக்கள் ஆதரவை இழந்து, அரசியலில் ஆதரவற்றுப் போயிருந்த இந்த எதிர்க்கட்சியினருக்குத் தற்போதைய அரசாங்கமே மீண்டும் புத்துயிர் வழங்கி வருகின்றது. அரசாங்கத்தின் தன்னிச்சையான போக்கினாலும், மக்கள் தேவைகளை நிறைவேற்றத் தவறுவதினாலும் இந்த எதிர்க்கட்சியினர் மீண்டும் குரலை உயர்த்தத் தொடங்கியுள்ளனர். எனவே, இந்த ஊழல்மிக்க பழைய அரசியல்வாதிகளின் பொய் வலைகளில் சிக்காமல், மக்கள் தங்களது சொந்த பலத்தைக் கட்டியெழுப்பி வீதியில் இறங்கிப் போராட முன்வர வேண்டும் என்றார்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# இரண்டு மரணத் தீர்ப்புகள்!

கடந்த ஆண்டு ஒகஸ்ற் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானத்தின் 43ஆவது பந்தியில் ஒரு விடயம் உள்ளது. இலங்கைத்தீவின் இன முரண்பாட்டு வரலாற்றில் பாலியல் வன்கொடுமைக் குற்றம் புரிந்ததற்காக படைத் தரப்பு தண்டிக்கப்பட்ட ஒரே ஒரு சந்தர்ப்பம் கிரிசாந்தி கொலை வழக்குத் தான் என்று அப்பந்தியில் கூறப்பட்டுள்ளது.

அதன்பின் விஸ்வமடு பாலியல் வன் முறை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சிப்பாய்களுக்கு 25ஆண்டு கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டாலும் பின்னர் மேல்முறையீட்டின் மூலம் அவர்கள் வெளியே வந்ததாகவும் அந்தப் பந்தியில் கூறப்பட்டுள்ளது. அதாவது இன முரண்பாட்டின் வரலாற்றில் பாலியல் வன்கொடுமைக் குற்றம் இழைத்த படைத் தரப்பு தண்டிக்கப் பட்ட ஒரே ஒரு சந்தர்ப்பம் கிரிசாந்தி கொலை வழக்குத்தான்.

அதில் தண்டிக்கப்பட்ட இளநிலை அதிகாரியான சோமவன்ச ராஜபக்ச அந்தக் குற்றத்தைத் தான் புரிய வில்லை என்றும் தான் ஒரு கருவி மட்டுமே என்றும், தொடர்ச்சியாகக் கூறி வருகிறார். தன்னை ஏவிய மேலதிகாரிகள் சிறைக்கு வெளியே பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்றும் தன்னைப் பலியாடு ஆக்கிவிட்டார்கள் என்றும் அவர் தொடர்ந்து கூறுகிறார்.

என்று கேட்கிறார்கள். அந்தக் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் ஒரு வெளிநாட்டுத் தடை அது.

மேற்சொன்ன உதாரணங்களில் ஆகப் பிந்திய விடயம் கடந்த கிழமை இடம் பெற்றது. ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட ஒரு முன்னாள் போலீஸ்மா அதிபருக்கும் முன்னாள் பாதுகாப்புத் துறை செயலாளருக்கும் ஈஸ்டர் குண்டுவெடிப்பைத் தடுக்கத் தவறியதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவின் போலீஸ் வரலாற்றில் 160 ஆண்டுகளில் ஒரு முன்னாள் போலீஸ் மா அதிபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவை. அது போலவே ஒரு பாதுகாப்புத் துறைச் செயலருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பது இது தான் முதல் தடவை.

அவர்கள் மேன் முறையீடு செய்ய முடியும். ஆனாலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த கடந்த இரண்டு ஆண்டு காலப் பகுதிக்குள் உள்நாட்டு நீதியின்

போலீஸ்மா அதிபர், முன்னாள் பாது காப்புத் துறைச் செயலர் அல்லது முன்னாள் புலனாய்வுக் கட்டமைப்பின் பணிப்பாளர் போன்றவர்களின் தனிப் பட்ட குற்றங்களாக எடுத்துக் கொள்ள முடியாது.அவை யாவும் கட்டமைப்பு சார் குற்றங்கள். அவர்களைப் போன்ற வர்கள் உயர் பொறுப்பில் இருக்கும் அளவுக்கு அந்தக் கட்டமைப்புகள் குற்றப் பண்புடையவைகளாக இருந் திருக்கின்றன என்று பொருள். இது திடீரென்று நிகழவில்லை. இந்தக் குற்றங்கள் வெற்றிடதில் நிகழவில்லை. இதற்கு ஒரு நீண்ட பாரம்பரியம் உண்டு.

தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறைப் பாரம்பரியத்தின் விளைவு இது. தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிபவர்கள் ஒன்றில் மன்னிக்கப்படுகிறார்கள், அல்லது தப்பிச் செல்கிறார்கள். இவ் வாறு குற்றவாளிகளைப் பாதுகாக்கும் அரசியல் பாரம்பரியத்தின் தொடர்ச்சி யாகத்தான் மேற்சொன்ன குற்றச் செயல் களையும் மேற்சொன்ன கட்டமைப்பு களையும் பார்க்க வேண்டும்.

அதாவது ஈஸ்டர் குண்டு வெடிப்பு

எதிராக இடம்பெற்றது இன அழிப்பு அல்ல. அது பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரு போர் என்று கூறப்படு கிறது. இதன் பொருள் பயங்கரவாதத் தைத் தோற்கடிப்பதற்கு அந்தப் போர் தவிர்க்க முடியாதது என்பது தான்.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு நீதி வேண்டும் என்று கேட்காத ஒரு பேராயர், ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு நீதி கேட்டுப் போராடும் ஒரு நாட்டிலே, கடந்த வாரம் ஈஸ்டர் குண்டு வெடிப்போடு தொடர்புடைய இரண்டு உயர் பொறுப்பில் இருந்தவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

இது கடந்த இரண்டு ஆண்டு கால பகுதிக்குள் இலங்கைத்தீவின் உள் நாட்டு நீதி பரிபாலனக் கட்டமைப்பின் நம்பகத்தன்மையை அனைத்துலக அளவில் பலப்படுத்துவதற்கு தேசிய மக்கள் கட்சி அரசாங்கம் முன்னெடு த்து வரும் தொடர்ச்சியான முயற்சி களில் ஆகப்பிந்தியது எனலாம். இதன் மூலம் செம்மணிக்கு உள்நாட்டிலேயே நீதி கிடைக்கும் என்று உலகத்தை நம்பச் செய்யலாம்.ஐநா மனித உரிமை கள் ஆணையாளரும் அவ்வாறு நம்புவதாகத் தெரிகிறது.

ஆனால் கடந்த மாத இறுதியில் செம்மணியில் யாழ்.மறை மாவட்டத் தைச் சேர்ந்த குருவானவர்கள் அமைதிப் பேரணி ஒன்றை முன்னெடுத்தார்கள். அந்தப் பேரணி செம்மணிக்கு நீதி கேட்டு முன்னெடுக்கப் பட்டது. பேரணியின் முடிவில் கருத்துத் தெரிவித்த அருட்தந்தை ஒருவர், செம்மணிப் புதைகுழிக்கு பன்னாட்டு விசாரணைகள் வேண்டும் என்று கேட்டிருந்தார். யாழ்.மறை மாவடட குருவானவர்களின் அந்தக் கோரிக்கையை கொழும்பு பேராயர் ஏற்றுக் கொள்வாரோ தெரியவில்லை. ஆனால் தமிழ் மறை மாவட்டங்கள், தமிழ் மக்களின் கூட்டுக் காயங் களோடும்,கூட்டு மனவடுக்களோ டும், கூட்டுக் கோரிக்கைகளோடும் நிற்கின்றன என்பதைத தான் அந்தப் பேரணி உணர்த்துகின்றது.

தமிழ் மக்கள் மட்டும் பன்னாட்டு விசாரணையைக் கேட்கவில்லை. அல்லது தமிழ் மக்கள் மட்டும் பன்னாட்டு விசாரணையை நம்ப வில்லை.குற்றம் சாட்டப்பட்டிருக்கும் சுரேஷ் சலேயும் அவருடைய வழக்கறி ஞரும் அவ்வாறு நம்புவதாகத் தெரிகிறது.

அண்மையில் சுரேஷ் சலேயின் வழக்கறிஞர் சஞ்சீவ ஜெயவர்தன அக் கருத்தைத் தெரிவித்திருந்தார். அனை த்துலக விசாரணைகளின் அடிப்படை யில் தமது கட்சிக்காரர் குற்றமற்ற வராகக் காணப்பட்டுள்ளார் என்று




தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் அவருடைய மனைவியும் தன் கணவன் கூறிய வற்றை மீண்டும் மீண்டும் வெளிப் படுத்தி வருகிறார். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ராஜபக்சவின் வாக்குமூலத்தை மீண்டும் விசாரணை க்கு எடுத்துக் கொள்ளவில்லை.

மற்றொரு வழக்கில் மிருசுவில் கொலைச் சம்பவத்தில் குற்றச்சாட்டப் பட்ட படை இளநிலை அதிகாரியான சார்ஜன்ற் சுனில் ரட்நாயக்கவுக்கு 2015 இல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. ஆனால் 2020இல் கோட்டா பய ராஜபக்ச தன்னுடைய நிறை வேற்று அதிகாரத்தை பயன்படுத்தி குற்றவாளிக்கு மன்னிப்பளித்தார்.

எனினும் அவ்வாறு மன்னிப்பு அளிக்க ப்பட்டவர் தனது நாட்டுக்கு வர முடியாது, அவருக்குப் பயணத் தடை விதிக்கப்படுகிறது என்று கனேடிய அரசாங்கம் அறிவித்தது. குற்றவாளிளுக்கு மன்னிப்பு வழங்கிய கோத்தபாய ராஜபக்ச உட்பட ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கனடா வுக்குள் பயணம் செய்வதற்கும், சொத்துக்களை வைத்திருப்பதற்கும், முதலீடு செய்வதற்கும் தடை உண்டு.

உள்நாட்டில் மன்னிப்பு வழங்கப்பட்ட குற்றவாளியை ஒரு வெளிநாடு தண்டி த்திருப்பது என்பது மிக அரிதான ஒரு தோற்றப்பாடு. நீதிக்காகப் போரா டும் தமிழ் மக்கள் தங்களுக்கு பன்னாட்டு விசாரணை வேண்டும்

நம்பகத்தன்மையை நிரூபிக்கும் விதத் தில் முன்னெடுத்திருக்கும் ஆகப் பிந்திய நடவடிக்கையாக இந்தத் தண்டனைகளைக் குறிப்பிடலாமா?

அதேசமயம் இந்தத் தண்டனைகளும் இவற்றுடன் தொடர்புடைய கைது நடவடிக்கைகளும் விசாரணைகளும் நமக்கு ஒரு விடயத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. இதில் தண்டிக்கப் பட்டிருப்பவர்களில் ஒருவர் முன்னாள் போலீஸ்மா அதிபர். மற்றொருவர் முன்னாள் பாதுகாப்புத்துறைச் செயலர். இவர்களைத் தவிர சுரேஷ் சலேயும் விசாரணைக் காவலில் உள்ளார். சுரேஷ் சலே இராணுவத்தின் மேஜர் ஜெனரல் தர தளபதி ஆவார். இலங்கைத் தீவின் சக்தி மிக்க புலனாய் வுக் கட்டமைப்பின் பணிப்பாளராக இருந்தவர்.

அதாவது முன்னாள் போலீஸ்மா அதிபர் முன்னாள் பாதுகாப்புத் துறைச் செயலர்,முன்னாள் புலனாய்வுத் துறைப் பணிப்பாளர் போன்றவர்கள் குற்றச் சாட்டப்பட்டிருக்கிறார்கள் அல்லது தண்டிக்கப்பட்டிருக்கிறார் கள். இது எதனைக் காட்டுகிறது? இலங்கைத் தீவின் சட்டம்,நீதி, ஒழுங்கு என்பவற்றைப் பாதுகாக்க வேண்டிய கட்டமைப்புகளின் உயர் பொறுப்பில் இருப்பவர்கள் எந்த அளவுக்குக் குற்றம் நிகழ்வதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதைத்தான்.

இதைத் தனிப்பட்ட ஒரு முன்னாள்

வெற்றிடத்தை நிகழவில்லை. அது நாட்டில் ஏற்கனவே நிலவிவந்த குற்றப் பண்புமிக்க கட்டமைப்புசார் பாரம் பரியம் ஒன்றின் தொடர்ச்சி தான். ஆனாலும் ஈஸ்டர் குண்டு வெடிப்பு க்கு நீதி கேட்கும் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களை பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று நியாயப்படுத் துகிறார்.



அண்மையில் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டது இன அழிப்புக் குற்றமே என்று கூறிய பொழுது, அதனை மறுத்து பேராயருடைய ஊடகக் கட்டமைப்பைச் சேர்ந்த ஒரு அருட்தந்தை மேற்கண்டவாறு கூறி யிருந்தார். அதாவது தமிழ் மக்களுக்கு

அவர் தெரிவித்துள்ளார். அதாவது பன்னாட்டு விசாரணைப் பொறிமுறை கள் நம்பகத்தன்மை மிக்கவை என்பதனால் அதை ஓர் ஆதாரமாக அவர் காட்டுகிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா? இது தமிழ் மக்களு க்கும் பொருந்தும் தானே?

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

30 மே 2026 முதல் 07 ஆகஸ்ட் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி சரோஜினிதேவி லோகநாதபிள்ளை

நாரந்தனை ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 15 யூன் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சரோஜினிதேவி லோகநாதபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம்

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர், லண்டன், மலேசியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும கனடா மிஸிசாகாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 06 யூன் 2026 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி

வேலணை தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 05 யூன் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கோபிநாத் கணேசமூர்த்தி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவுநாள் 16 மே 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர்களும் உறவுகளும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 22வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குமாரதாசன் விஜயகௌரி

இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களின் 22வது ஆண்டு நினைவு நாள் 17 மே 2026 ஞாயிற்றுக்கிழமையாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பேரம்பலம் முருகேசபிள்ளை

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 05 யூன் 2026வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் நண்பர்களுடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




16 மே 2026 சனிக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது பெற்றோர்களும் உறவுகளும் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




17 மே 2026 ஞாயிற்றுக்கிழமை இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




17 மே 2026 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் விதுஷன் சச்சிதானந்தன் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது பெற்றோர்களும் உறவுகளும் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




27 மே 2026 புதன்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளும் திருமதி சிவமணி பாலசிங்கம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளுமாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்னார்கள்.




13 மே 2026 புதன்கிழமை கனடாவில் வாழம் இசைஆசிரியை ஸ்ரீமதி சாருமதி மனோகாந்தன் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக ஸ்ரீமதி சாருமதி மனோகாந்தன் அவர்கள் 28 மே 2026 வியாழக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




05 யூன் 2026 வெள்ளிக்கிழமை நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கமலர் சிவசுப்பிரமணியம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 யூன் 2026 வெள்ளிக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 யூன் 2026 வெள்ளிக்கிழமை வேலணை தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




06 யூன் 2026 சனிக்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மிஸிசாகாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 யூன் 2026 ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு செல்லையா சோமசுந்தரம் அவர்களதும் திருமதி செல்வநாயகி சோமசுந்தரம் அவர்களதும் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




09 யூன் 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி இணையர்கள் புதுமனை புகுந்து 5வது ஆண்டு நிறைவையொட்டி பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




05 யூன் 2026 வெள்ளிக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னையா தவரட்ணம் அவர்களது 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக 10 யூன் 2026 புதன்கிழமை அவரது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




15 யூன் 2026 திங்கட்கிழமை நாரந்தனை ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி லோகநாதபிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




15 யூன் 2026 திங்கட்கிழமை கொல்லங்கலட்டி தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திருமதி செல்லமுத்து வடிவேலு அவர்களது 90வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் அன்னை செல்லமுத்து அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





19 யூன் 2026 வெள்ளிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


## நினைவழியா நினைவஞ்சலிகள்



### திரு செல்லையா சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 07 யூன் 2026 ஞாயிற்றுக் கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி இணையரை நினைவுகூரும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 34வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மராஜ் ராஜா (பத்தன்)

யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்தன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு பத்மராஜ் ராஜா அவர்களது 34வது ஆண்டு நினைவு நாள் 20 யூன் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பத்மராஜ் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நடராஜா கார்த்திகேசு

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பாரிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 13 யூலை 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் நடராஜா கார்த்திகேசு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குலசேகரம்பிள்ளை மங்கையற்கரசி

புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது 13வது ஆண்டு நினைவுநாள் 28 யூன் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசையா மகேஸ்வரி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களின் 14வது ஆண்டு நினைவு நாள் 29 யூன் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 25வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 25வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குமாரசாமி துரைராசா

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராசா அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 22 யூலை 2026 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குமாரசாமி துரைராசா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சரோஜினிதேவி ஞானசேகர்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 17 யூலை 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி ஆறுமுகம் சின்னம்மா

யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி ஆறுமுகம் சின்னம்மா அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 24 யூலை 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 25 யூலை 2026 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி ஆறுமுகம் சின்னம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராசா காசிலிங்கம்

யாழ்.ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராசா காசிலிங்கம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 03 ஆகஸ்ட் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராசா காசிலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5ம் மாத நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 5ம்மாத நினைவு நாள் 15 யூலை 2026 புதன்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவாஜினி பற்குணமாணிக்கம்

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவாஜினி பற்குணமாணிக்கம் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாள் 19 யூலை 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவாஜினி பற்குணமாணிக்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




20 யூன் 2026 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு கனகசிவம் கதிரவேலு அவர்களது 65வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கனகசிவம் கதிரவேலு அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




20 யூன் 2026 சனிக்கிழமை யாழ்.உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்தன் என்ற அன்பாக அழைக்கப்படும் திரு பத்மராஜ் ராஜா அவர்களது 34வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 யூன் 2026 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் திரு திருமதி கௌத்தமன் ஆர்த்திகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சித்விகன் கௌத்தமனின் முதலாவது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சித்விகன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




24 யூன் 2026 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிருஷன் கோணேஸ்வரனின் 26வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிருஷன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




28 யூன் 2026 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி குலசேகரம்பிள்ளை மங்கையற்கரசி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




29 யூன் 2026 திங்கட்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மகேஸ்வரி இராசையா அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




28 யூன் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் கிருஷாந் வரதராஜா அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




28 யூன் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் கிருஷாந் வரதராஜா அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




28 யூன் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் கிருஷாந் வரதராஜா அவர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




13 யூலை 2026 திங்கட்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





13 யூலை 2026 திங்கட்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




15 யூலை 2026 புதன்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 5ம் மாத நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




15 யூலை 2026 புதன்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.





17 யூலை 2026 வெள்ளிக்கிழமை சுருவிலைப் பிறப்பிடமாகவும் றொறன்ரோ கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




17 யூலை 2026 வெள்ளிக்கிழமை சுருவிலைப் பிறப்பிடமாகவும் றொறன்ரோ கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# இராஜதந்திரம் பழகுதல்!

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



நாங்கள் மெத்தப் படித்தாக்கள் தெரியுமோ என்னும் நிலைமை போய், எங்களப் போல மொக்கர்களாக இருக்க ஏலுமோ என்று கேட்கும் நிலைமை அப்போது. சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த காலத்தில், தேர்தல் மேடைகளில் ஒரு விடயத்தை அடிக்கடி கூறிக் கொண்டிருந்தார். அதாவது, நாங்கள் ஒரு ராஜதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

பொதுவாக சம்பந்தன் மேடையில் பேசுகின்ற போது, கீழே இருப்பவர்களை நோட்டம் விடுவதுண்டு. இதனை பல்வேறு தடவைகள் நான் அவதானித்திருக்கின்றேன். கீழே இருப்பவர்களில், விடயங்கள் அறிந்த எவரேனும் இருக்கின்றார்களா அல்லது, இருக்கின்ற அனைவருமே நான் என்னகூறினாலும் ஆவென்று வாயை பிளந்து கொண்டு நிற்கக் கூடியவர்களா, என்பதை மதிப்பிடுவதற்காகத் தான் சம்பந்தன் அவ்வாறு சுற்றுமுற்றும் பார்ப்பதுண்டு.

கிட்லர் பற்றிக் கூறுவார்கள், கிட்லர் பேசுகின்ற போது, தனக்கு முன்னால் லட்சக்கணக்கான முட்டாள்கள் இருக்கின்றனர் என்னும் எண்ணத்தோடு தான் பேசுவதுண்டாம். கிட்லர் எண்ணினாரோ இல்லையோ நாமறியோம், ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் பலர் அப்படித் தான் பேசுகின்றனர். அப்படி செயற்படுகின்றனர்.

தண்டல்காரர்கள் என்பது போல், கட்சி வைத்திருப்பவர்கள் எல்லோருமே மாபெரும் ராஜதந்திரிகள் என்பது போலவே தமிழ் கட்சியினர் நடந்து கொள்கின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற சம்பவம் ஒன்று இப்போது நினைவுக்கு வருகிறது. சீனாவிற்கு ஒரு அரசியல் குழு சென்றிருந்தது. அதில் தமிழரசுக் கட்சி சார்பில் ஒரு ஊடகவியலாளர் சென்றிருந்தார். அங்கு சந்தித்த சீன அதிகாரிகளிடம், தமிழ் மக்களின் அரசியல் விடயம் தொடர்பில் அவர் பேசியிருக்கின்றார்.

அதனைக் கேட்டு விட்டு, அந்த சீன ராஜதந்திரி கூறியிருக்கின்றார், எங்களின் வெளிவிவகாரக் கொள்கை உங்களுக்கும் தெரியும் தானே நாங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்வதில்லை. எனவே இந்த விடயங்களை விட்டு விட்டு, உங்கள் பகுதியில் ஒரு வீதியை போட வேண்டியிருக்கின்றது என்றால் எங்கள் உதவியை நீங்கள் கேட்கலாம், அதனை நாங்கள் அரசாங்கத்திற்கு சுட்டிக் காட்டி, எங்கள் உதவியில் இந்த வீதியையும் உள்ளடக்குமாறு அரசாங்கத்தை கோருவோம். இப்படித்தான் நீங்கள் எங்களிடம் வர வேண்டும். நாடுகளை அறிந்து அணுக வேண்டும் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம். சீனாவிடம் ஒருவர், இன்னொரு நாட்டில் அரசியல் உரிமைகளை

அவரிடமும் அந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார். இன்னொரு புறம், சிவஞானம் சிறிதரன், கர்நாடாகாவிலுள்ள எதிரணி அரசியல்வாதிகளை சந்தித்து, அவர்களின் உதவியை கோரியிருக்கின்றார். தமிழ் நாட்டிற்கும் கர்நாடாகாவிற்கும் இடையிலுள்ள தண்ணீர் பிரச்சினையே அவர்களால் தீர்க்க முடியாமல் இருக்கின்றது. இவர்கள் எல்லாம் போகின்ற போது, எங்களுடைய பங்கிற்கு நாங்களும் ஏதாவது செய்யத்தானே வேண்டும் என்று கருதிய, எம்.ஏ.சுமந்திரனும் அவருடைய பங்கிற்கு எதிரணியில் இருக்கும் ஸ்டாலின், கனிமொழி போன்றவர்களை சந்தித்திருக்கின்றார். இவ்வாறான சந்திப்புக்களில் அரசியல் பெறுமதி என்ன?

கடந்த காலங்களில் புலம்பெயர் நாடுகளில் உள்ள சிலர், தமிழரசு கட்சியிலிருக்கும் சிலரையும் இணைத்துக் கொண்டு, தமிழ் நாடு சென்று, பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களை சந்தித்திருந்தனர். அதன் பின்னர் ஒரு குழு புதுடில்லியில் உறவாடுவதாகக் கூறி, ஜனநாயகப் போராளிகள் என்னும் கட்சியின் உறுப்பினர்களுக்கு கோர்ட் அணிவித்தது. அதே போன்று சில வருடங்களுக்கு முன்னர் இரண்டாவது வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்று கூறி, தமிழ் நாட்டில் அஞ்ஞாதவாசம் செய்து வரும் காசியானந்தன், ஒரு

பாதுகாப்பதிலோ எந்தவொரு தலையீட்டையும் செய்ய முடியவில்லை. இப்போது புதுடில்லியில் இடம் பெறும் விடயங்களுக்கு ஆதரவாக தமிழ் நாட்டு நடிகர்கள் மேடையில் முழங்குவது போன்று, அப்போதும் பலர் மேடைகளில் ஆவேசப்பட்டனர். என்ன நடந்தது? இறுதியில் பல்லாயிரக்கணக்கான மக்களின் பலியுடன் யுத்தம் முடிவுற்றது. மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் போதே, செய்ய முடியாததை, மத்தியில் எவ்வித குரலும் இல்லாத நிலையிருக்கும் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் செய்ய முடியுமா?

முதலில் ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும். இந்திய வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவின் மானில அரசாங்கங்களுக்கு இடம் இல்லை. இது அடிப்படையான விடயம். புதுடில்லி, அதன் வெளிவிவகார நகர்வுகளுக்கு தேவை என்றால் மானிலத்தின் சென்ரிமென்டுகளை பயன்படுத்திக் கொள்ளும். தனது தலையீட்டிற்கான ஒரு காரணமாக்கிக் கொள்ளும். இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் போது அது தான் நடந்தது – தமிழ் நாட்டின் சென்ரிமென்டை பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அளவிற்கு பயன்படுத்திக் கொண்டது.

இந்த விடயங்கள் தொடர்பில் போதிய புரிதல் இல்லாமல், தமிழ் நாட்டு அரசியல்வாதிகளுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொள்வதில் எவ்வித பயனும் இல்லை. இதற்கு மிகச் சிறந்த உதாரணம் எல்லை தாண்டிய மீனவர் பிரச்சினை. அவர்கள் எவரும் வட இந்தியர்கள் அல்லவே! தமிழ் நாட்டு மீனவர்கள்தானே எல்லை

செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான டெலோ குழுவினர், இலங்கைக்கான ஜப்பான் தூதரக அதிகாரிகள் இருவரை கண்டிருக்கின்றனர். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில், ஜப்பான் உதவி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கின்றனர். இந்தச் செய்தியை பார்த்த நண்பர் ஒருவர் கேட்டார்,

ஜப்பான் எப்படி தமிழ் மக்களின் அரசியல் தீர்விற்கு உதவி செய்ய முடியும்? நாட்டு நடப்புக்களை சாதாரணமாக பார்த்துக் கொண்டிருக்கும் எனக்குத் தெரிந்த விடயம் கூடவா, இவர்களுக்கு விளங்கவில்லை? இதே போன்று தான், சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கான சுவிஸ் தூதுவருக்கு டெலோ பொன்னாடை போர்த்தி அவருக்கு நன்றி தெரிவித்திருந்தது.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு கட்சி, எதற்காக ஒரு நாட்டின் தூதுவருக்கு பொன்னாடை போர்த்தி நன்றி தெரிவிக்க வேண்டும்? என்னிடம் சிலர் இப்படியான கேள்விகளை கேட்கும் போதெல்லாம், என்ன பதில் கூறுவதென்று தெரியாமல் சங்கடப்பட வேண்டியிருக்கின்றது. உண்மையில் இப்படியான கேள்விகளுக்கு ஒரு வரியில் பதிலளிப்பதானால் – தமிழ் அரசியல்வாதிகளின் ராஜதந்திர அறிவு இவ்வளவு தான் – என்று தானே கூற முடியும்.

யாரிடம் எதைக் கேட்க வேண்டும் எப்படிக் கேட்க வேண்டும் எப்போது கேட்க வேண்டும் முதலில் ஒன்றை மற்றவர்களிடம் எதிர்பார்ப்பதற்கு முன்னர், அதனை அவர்களிடம் எதிர்பார்க்கும் தகுதிநிலை நமக்கு இருக்கின்றதா? ராஜதந்திரப் பயணத்தில் இறங்குவதற்கு முன்னர், ஒரு அரசியல் கட்சி தங்களுக்குள் இவ்வாறான கேள்விகளை கேட்டுக் கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் சொல்வார்களே கோம் வேர்க் (வீட்டு வேலை) என்று ராஜதந்திர அரசியலுக்கான வீட்டு வேலையை முதலில் மேற்கொள்ள வேண்டும்.

ஆனால் தடியெடுத்தவர் எல்லாம்

பாதுகாப்பது தொடர்பில் பேசுவாரானால், அவருக்கு சீனாவின் வெளிவிவ ஷகாரக் கொள்கையின் அரிச்சுவடி கூடத் தெரியாது என்பது தான் பொருள். இந்தியாவிடம் எதைக்

நகைச்சுவை நாடகத்தை அரங்கேற்றியிருந்தார். இந்துத் தமிழீழம் என்னும் ஒரு புதுக் கதை சொல்லப்பட்டது. அதற்கு சில அரசியல் ஆய்வாளர்கள் என்போரும் விளக்கவுரைகள் எழுதி




கோர வேண்டும், அமெரிக்காவிடம், ஜப்பானிடம் எதைக் கேட்க வேண்டும் என்பதை அறிந்து பேச வேண்டும். அதுதான் ராஜதந்திரம் பழகுவதன் அடிப்படை.

ஆனால் நமது சூழலில் அப்படியான முதிர்சியை காண முடியவில்லை. தொடர்ந்தும் ராஜதந்திரம் என்னும் பெயரில் கோமாளித்தனம்தான் அரங்கேறுகின்றது. தமிழ் நாட்டு அரசியல்வாதிகளுடன் ஏட்டிக்குப் போட்டியாக படம் எடுத்துக் கொண்ட சம்பவம் இதனை தெளிவாக படம்பிடித்துக் காட்டியது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதலில் சென்றார். ஸ்டாலின் முதலமைச்சராக இருக்கின்ற போது அவரைச் சந்தித்து, சமஸ்டியை அடைவதற்கு தமிழ்நாடு உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். பின்னர், முதலமைச்சர் ஜோசப் விஜயை சந்தித்து

யிருந்தனர். திரும்பிப் பார்த்தால் எந்தளவிற்கு ஈழத் தமிழ் சமூகத்தை ஒரு கோமாளிச் சமூகமாக காண்பிக்க முடியுமோ, அந்தளவிற்கு தேவையான அனைத்தையும் கடந்த பதினேழு வருடங்களில் செய்திருக்கின்றனர். ஆனாலும் அந்தக் கோமாளிப் பயணம் நின்றதாகத் தெரியவில்லை.

தமிழ் நாட்டுத் தலைவர்களை சந்திப்பது தொடர்பில் பேசுகின்ற போது ஒரேயொரு கேள்வியைத் தான் நாம் நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும். தமிழ் நாட்டின் அரசியல் எல்லை என்ன? அதற்கு தனியான ஆற்றல் இருக்கின்றதா? இறுதி யுத்தத்தின் போது, கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றம் கழகம், மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகித்திருத்தது. அவ்வாறானதொரு நிலையில் கூட, இறுதி யுத்தத்தை நிறுத்துவதிலோ, மக்களை

தாண்டுகின்றனர். அதைத் தடுப்பதற்கு தமிழ் நாட்டால் என்ன செய்ய முடிந்தது? தமிழ் நாட்டால் சமஸ்டித் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கலாம் என்று நம்புவதும், அதற்காக அங்கு செல்வதும் எந்தளவிற்கு நகைச்சுவையானது என்பதை புரிந்து கொள்வதில் இப்போது சிரமம் இருக்காதல்லவா.

தமிழர் தரப்புக்கள் முதலில் தங்களின் பாசாங்குத்தனமான அரசியல் நடவடிக்கைகளை கைவிட வேண்டும். தாங்கள் என்ன நிலையில் இருக்கின்றோம் என்பதை புரிந்து கொண்டு, அதற்கேற்ப முதலில் தங்களை அரசியல்ரீதியில் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழர் தரப்பு தன்னை தயார்படுத்தாமல், உலகில் எங்கு சென்றும் பயனில்லை.

ஏனெனில் ஒரு ராஜதந்திர நகர்வின்
(22ம் பக்கம் பார்க்க)

# தின்ன ஒரு திருக்குறள்!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

இந்திய பிஸ்கட் கொம்பனி ஆகிய பிரிட்டானிகா ஒரு வித்தியாசமான காரியத்தை செய்திருக்கிறது. அதனுடைய பால் பிஸ்கட்களில் திருக்குறளை பொறித்துள்ளது. அதனை அவர்கள் திருக்குறள் சவால் என்று அழைக்கிறார்கள். ஒரு திருக்குறளின் சொற்களை வெவ்வேறு பிஸ்கட் பகுதிகளில் தனித்தனியாக பொறித்திருப்பார்கள். பிள்ளைகள் வெவ்வேறு பொதிகளில் உள்ள சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஒழுங்குபடுத்தி குறிப்பிட்ட திருக்குறளை முழுமையாக்க வேண்டும். பின்னர் அதனை அதற்கென்று பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டிருக்கும் இணையத் தளத்தில் ஸ்கான் செய்து பதிவிடுவதன் மூலம் பரிசுகளை வெல்லலாம்.

ஒரு திருக்குறளை கண்டு பிடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட பிஸ்கட் பொதிகளை வாங்க வேண்டியிருக்கும். எனவே முதலாவது அர்த்தத்தில் அது ஒரு வணிக உத்தியாகத் தோன்றலாம். ஆனாலும் பிரிட்டானிகா கொம்பனி கூறுவது போல திருக்குறளை அது சிறுவர் மயப்படுத்தும். மக்கள் மயப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. ஒரு பழந்தமிழ் அறநெறி நூலை இவ்வாறு பிஸ்கட்டோடு சேர்த்து மக்கள் மயப்படுத்துவது என்பது நல்ல விடயம். அதில் இருக்கக்கூடிய வணிக உத்திகளுக்கும் அப்பால் சாப்பிடுவதற்கு ஒரு திருக்குறள் என்ற உத்தியானது தமிழ் சிறுவர்களை அவர்களுடைய பண்பாட்டு வேர்களுக்கு போகத் தூண்டும் விடுப்புணர்வும் சுவையும் கலந்த ஒரு வணிக உத்தி என்பதில் சந்தேகம் இல்லை.

பிரிட்டானிகா போன்ற ஒரு பெரு வணிக நிறுவனம் அதன் வணிக உத்திக்குள் பண்பாட்டு அம்சங்களை பரவலாக்குவது என்ற விடயத்தை இணைத்திருப்பதை வரவேற்க வேண்டும். ஏனென்றால் ஒரு பிஸ்கட் கொம்பெனியின் வணிக உத்தி என்ற அடிப்படையில் அது பரவலாக சென்றடையும். இது போன்ற வேர்களை நோக்கி செல்லும் விழிப்புணர்வை பெருவணிக நிறுவனங்கள் குறைந்த பட்சம் வியாபார உத்தியாக ஆவது எடுத்துக் கொள்வது வரவேற்கத்தக்கது. ஏனென்றால் நல்லவைகள் மக்கள் மயப்படும் போது நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். பாடவிதானத்துக்குள் இருக்கும் திருக்குறள் பரீட்சைக்காக கட்டாயமாக பாடமாக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் பால் பிஸ்கட்டில் பொறிக்கப்பட்ட திருக்குறள் விடுப்புணர்வை தூண்டுவது போட்டியுணர்வை தூண்டுவது. அன்றாட வாழ்வின் சிற்றுணவுகளில் ஒன்று.

பெரு வணிக நிறுவனங்களின் வணிக உத்திகள் அனேகமாக புத்தி பூர்வமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அவற்றுக்குப் பின் மனித உளவியலைத் தீர்மானிக்கும் ஆராய்ச்சி முடிவுகள் உண்டு. உதாரணமாக 2013ஆம் ஆண்டு இங்கிலாந்தின் காட்பரி கொம்பெனி தன்னுடைய சொக்லேட்களின் வடிவத்தை மாற்றியது. சதுர வடிவில் இருந்த சொக்லேட்களை 2013இல் வளைவான வடிவத்துக்கு மாற்றப்பட்டன. சதுரத்தில் இருந்து வளைவுகளுக்கு ஏன் போக வேண்டும் என்ற கேள்விக்கு அந்த நிறுவனம் விஞ்ஞானபூர்வமான ஒரு விளக்கத்தை கொடுத்தது. அதில் கணிதம் இருந்தது. உளவியல் இருந்தது. காஸ்ரோ பிசிக்ஸ் (Gastrophysics) இருந்தது. வாய் வட்டமானது. சதுரமானது அல்ல அதனால் வளைந்த வடிவத்தைக் கொண்ட சொக்லேட் இலகுவாக வாய்க்குள் கரையும் என்று அந்த கொம்பெனி கூறியது.




ஆனால் அந்த சொக்லேட் வளைவுகள் பெண்ணின் உடல் வளைவுகளை மனதிலிருத்தி உருவாக்கப்பட்டவையா என்ற கேள்வி எழுந்தது. சொக்லேட்களை அவ்வாறு சதுர வடிவத்தில் இருந்து வட்ட வடிவங்களுக்கு மாற்றியதால் உற்பத்தி செலவு குறைந்தது என்றும் நுகர்வு அதிகரித்தது என்றும் கூறப்படுகிறது. ஏனெனில் வளைந்த ஓரங்களைக் கொண்ட சொக்லேட்கள் அதிகம் சுவையாக இருந்தன என்று நுகர்வோர் சொன்னார்கள். அதனால் வளைந்த வடிவ சொக்லெற்றுகளில் அதிகம் இனிப்புச் சேர்க்கப்படுகிறதா என்ற சந்தேகமும் எழுந்தது.

காட்பரி கொம்பெனி தனது சொக்லேட்களின் வடிவத்தை மாற்றியதற்கு பின்னால் அறிவு பூர்வமான சாப்பாட்டு உளவியல் விளக்கம் ஒன்றை கூறுகிறது. அந்த விளக்கத்தோடு ஒப்பிடுகையில் பிரிட்டானிகா கொம்பனியின் திருக்குறள் பால் பிஸ்கட்டுக்கு பண்பாட்டு ரீதியாக முக்கியத்துவம் அதிகம்.

திருக்குறளை மக்கள் மயப்படுத்துவதற்கான மேற்கண்ட வணிக உத்தி ஈழத் தமிழர்களுக்கு புதியது அல்ல. ஏற்கனவே பல தசாப்தங்களுக்கு முன்பு ஈழத் தமிழர்கள் மத்தியில் தோன்றிய மதிப்புக்குரிய தொழில் முனைவோர் ஒருவர் அதை பிரீட்சித்து இருக்கிறார். அவர் தான் மில்க் வைட் கனகராசா அவர்கள். திருக்குறளை அவர் எப்படி பரவலாக்க முயற்சித்தார் தெரியுமா? மில்க்வைட் நீல சோப்பின் காகித உறையில் திருக்குறள் எழுதப்பட்டிருக்கும். அல்லது பனை வளர்ப்போம் பயன் பெறுவோம் போன்ற வசனங்கள் இருக்கும். அந்த சோப் உறைகளைச் சேகரித்து மில்க்வைட் அலுவலகத்தில் கொடுத்தால் அதற்குப் பரிசு கிடைக்கும். திருக்குறளை சோப் கவருக்குள் கொண்டு வந்தார் கனகராசா. அவர் எதிர்பார்த்த வெற்றியை அது கொடுத்தது.




அப்பொழுது துணி துவைக்கப் பயன்படுத்தும் ரசாயனங்கள் ஒப்பிட்டு எவில் குறைவாக இருந்தன. பாடசாலைப் பிள்ளைகள் தங்களுடைய சீருடைகளை தோய்த்து கழுவும் போது கடைசி கழுவலில் நீரில் நீலச் சாயத்தை கரைப்பார்கள். அந்த நீலம் வெண்ணிற உடுப்பை பிரகாசமாக்கும். மில்க் வைட் கனகராசா சோப்பிலேயே நீலத்தைக் கலந்தார். அந்த நீலக்கட்டி சோப்பை வாங்கும் குடும்பங்கள் அந்த சோப்பின் உறையை சேகரிக்கும் போது திருக்குறளும் சேகரிக்கப்படும். அதற்குப் பரிசும் கிடைக்கும்.

எனது நண்பர் ஒருவர் கூறுவார். மில்க் வைட் கனகராசாவோடு க.சி குலரத்தினம் என்ற ஓர் அறிஞரும் இணைந்திருந்தார். அந்த இணைக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு என்று. ஒரு முதலாளியும் அறிஞரும் இணைந்து இருப்பது. முதலாளியின் வணிக நோக்கங்களுக்குள் அறிஞர் ஆகிய குலரத்தினம் பண்பாட்டு இலக்குகளை இணைத்துச் செழுமைப்படுத்துவார். குலரத்தினம் மில்க்வைற் செய்தி இதழின் ஆசிரியராக இருந்தார்.

பாடசாலையின் வகுப்பறைகளுக்குள் பாடத்திட்டத்திற்குள் சுருக்கப்பட்டிருக்கும் ஒரு விடயத்தை அன்றாட வாழ்வில் சகஜமான, சுவையான ஒரு பயில்வாக மாற்றுவது ஒரு வணிக இலக்கு மட்டுமல்ல பண்பாட்டு இழக்கும் தான். நல்லவைகள் தரமானவைகள் மகிமைக்குரியவைகள். உயர்ந்த ரசனைக்குரியவைகள் மக்கள்மயப் படுவது நல்லதே.

முச்சக்கர வண்டிகளின் கூரை முதுகில் எழுதப்படும் இலட்சிய வாசகங்களுக்கும் அப்படி ஒரு பெறுமதி உண்டு.சிலர் அந்த முதுகில் பெயர்களை எழுதுவார்கள். சிலர் அந்த முதுகை நடமாடும் விளம்பரப் பலவையாக மாற்றி அதில் ஏதாவது நிறுவனத்தின் பெயரை எழுதுவார்கள். பெரும்பாலான முச்சக்கர வண்டிச் சாரதிகள் அந்த முதுகில் இலட்சிய வாசகங்களை எழுதுவார்கள். அதன் மூலம் அவர்கள் தமது முச்சக்கர வண்டிக்கு ஒரு சமூக அந்தஸ்தை உருவாக்க முயற்சிக்கிறார்கள். ஓட்டோக்களின் முதுகில் காணப்படும் அந்த இலட்சிய வாசகத்தை அனேக மானவர்கள் வாசிப்பார்கள். அதில் காதல் இருக்கும் சோகம் இருக்கும் தத்துவம் இருக்கும் இலட்சியமும் இருக்கும்.எதுவானாலும் அது ஒரு நடமாடும் சிறிய விளம்பர பலகை.

நல்லவைகளை எப்படி மக்கள் மயப்படுத்துவது என்பதுதான் இங்குள்ள சவால்.மக்களுடைய பலவீனங்களையும் உணர்வுகளையும் கனவுகளையும் சுரண்டும் கெட்டவை இலகுவாக வைரல் ஆகின்றன.இப்படிப்பட்டதோர் நடைமுறை உலகில் பல தசாப்தங்களுக்கு முன்னரே அழுக்கை அகற்ற ஒரு திருக்குறள் கிடைத்தது. இப்பொழுது தின்ன ஒரு திருக்குறள்.



# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




19 யூலை 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவாஜினி பற்குணமாணிக்கம் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 யூலை 2026 புதன்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா குமாரசாமி அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 யூலை 2026 சனிக்கிழமை கனடா வாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.




24 யூலை 2026 வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஆறுமுகம் சின்னம்மா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 25 யூலை சனிக்கிழமை அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறபடபு உணவு வழங்கினார்கள்




26 யூலை 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரஜிதன் பிரசாந்தி இணையர்களின் செல்வப்புதல்வி சக்தி ரஜிதனின் முதலாவது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சக்தி ரஜிதன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




28 யூலை 2026 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தங்கம்மா விநாசித்தம்பி அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




02 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சுதர்சினி கோணேஸ்வரன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




03 ஆகஸ்ட் 2026 திங்கட்கிழமை ஊரெழவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா காசிலிங்கம் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




03 ஆகஸ்ட் 2026 திங்கட்கிழமை ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா காசிலிங்கம் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# கனடாவாழ் கருணையாளர்களே! இவர்களுக்காக.....

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.




தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!



தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக் குழந்தைகளின் வாழ்வாதாரம். மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# செம்மணி அகழ்வுகள் நீதிக்கான தேடலா? அரசியல் சடங்கா?

இலங்கையில் இரண்டு விதமான அகழ்வுப்பணிகள் நடக்கின்றன. ஒன்று, இலங்கை அரசு திட்டமிட்டுச் செயற்படுத்துகின்ற தொல்பொருள் அகழ்வுப் பணி. இது பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை விரிவாக்குவதற்கும் நிலைப்படுத்துவதற்குமான ஏற்பாடு. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தான் இந்தப் பணி மும்முரப்படுத்தப்பட்டுள்ளது. இது தேவையில்லாத ஒரு பிரச்சினையும் கூட. இரண்டாவது, மனித உரிமை மீறல்களோடு தொடர்புடையது. காணாமலாக்கப்பட்டு அல்லது அரசியல் முரண்பாடுகள் காரணமாகக் கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படும் மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவது.

இதில் மிகப் பெரிய புதைகுழியாக இருப்பது யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியாகும். இங்கே இது வரையில் 417 மனித எலும்புக் கூடுகளும் பாதணிகள், விளையாட்டுப் பொருட்கள், ஆடைகள், கைப்பைகள் போன்ற ஏனைய தடயப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வினை அரசாங்கம் விரும்பவில்லை. ஆனாலும் அதனால் இதைத் தவிர்க்க முடியாதிருக்கிறது. காரணம், மக்களுடைய விழிப்புணர்வுப் போராட்டங்களும் சர்வதேச அழுத்தங்கள், அவதானிப்புகளுமாகும்.

இதனால் போருக்குப் பிந்தைய அரசியற் சூழலில், செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள், வெறுமனே சான்றுகளைத் தேடும் ஒரு தொழில்நுட்ப நடவடிக்கையாக இல்லாமல், இது பல தசாப்த காலங்களாக மூடி மறைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், அரசியல் பழி தீர்த்தல்கள் பற்றிய உண்மைகளையும், கூட்டு மனவடுக்களையும் (Collective Trauma) கிளறி, அதன் மூலம் நீதிக்கான போராட்டங்களை நடாத்தக்கூடிய ஒரு தீவிர அரசியல் நிகழ்வாக மாறியுள்ளது.

இது 1990களின் பிற்பகுதியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களின் மௌன சாட்சியாக விளங்கும் பல விடயங்கள் இன்று மேலெழுந்து கொள்வதற்கு இது வாய்ப்பளித்துள்ளது. இதனால், இது சர்வதேச அழுத்தங்களுக்கும் உள்நாட்டுப் பேரினவாதப் போக்குகளுக்கும் இடையிலான ஓர் அரசியல் போர்க்களமாக மாறியுள்ளது எனலாம்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) கண்காணிப்பும், இந்த அகழ்வுப் பணிகளுக்குச் சர்வதேசப் பரிமாணத்தை வழங்கியுள்ளன. ஆயினும், இலங்கையின் இடைக்கால நீதி (Transitional Justice) மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையானது, உண்மையான அரசியல் விருப்பத்துடன் நகர்கிறதா அல்லது வெறும் சர்வதேச மதிப்பைக் காப்பதற்கான ஒரு தற்காலிக அரசியல் சடங்காகச் சுருங்கிப் போகிறதா என்ற தார்மீகக் கேள்வியை இந்தச் செம்மணி விவகாரம் மீண்டும் உலக அரங்கில் எழுப்பியுள்ளது.

இலங்கையில் இதுவரையில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இது மிகப் பெரிய ஒன்றாகச் சொல்லப்படுகிறது. இதனால் தவிர்க்க முடியாமல் இந்த விடயத்தில் தானும் பொறுப்புடன் நடந்து கொள்கிறேன் என்று NPP அரசாங்கம் வெளிப்படுத்த முயற்சிக்கிறது. என்பதால் தான் தொடர்ந்து நடைபெற்று வரும் மீட்புப் பணிகளையும் அந்த இடத்தையும் பார்ப்பதற்காக இலங்கையின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, கடந்த 19.06.2026 அன்று செம்மணிக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது, இரண்டு ஆண்டுகளுக்குள் அரசாங்கம் இதற்கான ஒரு நீதி விசாரணையை நடத்தி, உரிய தீர்வைத் தரும் என்று அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால், அப்படி நீதி விசாரணைகள் நியாயமான முறையில், நம்பகத்தன்மையோடு நடக்குமா என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை.

இலங்கையின் அரசியல் வரலாற்றில், தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட எத்தகைய அரசியல் அநீதிகளுக்கும் எத்தகைய நீதி வீசாரணைகளும் நேர்மையோடு நடத்தப்பட்டதுமில்லை, தீர்வோ நிவாரணமோ வழங்கப்பட்டதுமில்லை. எனவே ஹர்ஷன நாணயக்காரவின் வார்த்தைகளுக்கும் எத்தகைய உத்தரவாதங்களுமில்லை.

இதேவேளை இவ்வளவு தொகையான என்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அதுவும் யாழ்ப்பாண நகரத்துக்கு அண்மையில். இருந்தாலும் அது யாழ்ப்பாணச் சமூகத்தையோ தமிழ்ச் சமூகத்தையே பெரிதாக உலுக்கியதாக இல்லை என்றே கூற வேண்டியுள்ளது. ஏனென்றால், இதைக் குறித்து யாழ்ப்பாணத்தில் பெரிய அதிர்வுகள் எதையும் காணவில்லை. இதெல்லாம்

நடந்த ஒரு விடயம். காலம் கடந்த பின் எலும்புக் கூடுகளைத் தோண்டி எடுப்பதால் என்ன பயன்?'' என்று சிலர் கருதுலாம். என்பதால் தான் அவ்வப்போது வெளியாகிக் கொண்டிருக்கும் தடயச் செய்திகளை

ஊடகங்கள் புள்ளிவிவரங்களாக வெளியிட அதைப் படித்துக் கடந்து போகும் உளநிலையில் தான் பலரையும் காண்கிறோம். ஆனால், குறித்த உறவினர்களுக்கும் மனித உரிமை



யாளர்களுக்கும் மனித குலத்துக்கும் இது மிகப் பெரிய கவனத்திற்குரிய ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்தை 1994 இல் இலங்கை இராணுவம் ஆக்கிரமிப்புச் செய்த காலத்திலும் 2006 இல் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த போதும் பல நூற்றுக்கணக்கானோர் காணாமலாக்கப்பட்டனர் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கட்டுரையாளரின் நண்பர்கள், அவருக்குத் தெரிந்த குடும்பங்களின் உறுப்பினர்கள் கூட கடத்தப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். அவர்களில் பலருடைய நிலை இன்றுவரையில் தெரியாது.

ஆனால் 1996இல் கிரிஷாந்தி என்னும் பாடசாலை மாணவியும் அவருடைய குடும்பத்தினரும் படையினரால் கொல்லப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபரான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ செம்மணியில் 400க்கு மேற்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டனர் என்று தெரிவித்திருந்தார். இருந்தும் இதற்குப் பின்னர் கூட அந்தப் பகுதியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை.

2025 பெப்ரவரி மாதத்தில், நல்லூர் பிரதேச சபையினரால் செம்மணி சிந்துபாத்தி மயானப் பகுதியில் வடிகால் அமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காகக் குழிகள் வெட்டப்பட்ட போது, தற்செயலாகப் பல மனித எலும்புச் சிதிலங்கள் வெளியே வந்தன. அதைத் தோண்ட மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளே பின்னர் வெளிவந்து கொண்டிருக்கும் இன்றைய உண்மைகள். இதைக் கவனப்படுத்துவதில் சில ஊடகர்களும் ஊடகங்களும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் மற்றும் தமிழ் சிவில் அமைப்புகள் போன்றன முக்கியமாக இருந்தாலும் சமூக அடிப்படையில் இது போதாது. ஆனாலும் சில போராட்டங்களை மக்கள் அமைப்புகள் இணைந்து நடாத்தியுள்ளன. குறிப்பாக 2026 ஜஜீன் 19 அன்று நீதி அமைச்சர் செம்மணிக்குச் சென்றபோது, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் A9 பிரதான வீதியை மறித்து நீதி இல்லாத நாட்டில் நீதி அமைச்சர் எதற்கு? என்ற கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

இதற்கு முன் 'சம உரிமைக்கான இயக்கம்' போன்ற அமைப்புகள் தமிழ் மற்றும் சிங்கள முற்போக்காளர்களை ஒன்றிணைத்து யாழ்ப்பாணத்தில் போராட்டம் நடத்தி, செம்மணி உண்மைகளை மூடி மறைக்கக் கூடாது என வலியுறுத்தின. 2025 ஜீன் 25 இல் ஐநா மனித உரிமைகள் உயர் ஆணையர் வோல்கர் டர்க் (Volker Turk) செம்மணி மனித புதைகுழிப் பகுதிக்கு நேரில் விஜயம் செய்திருந்தார். அப்பொழுது மக்கள் போராட்ட இயக்கத்தால் அணையா விளக்கு போராட்டம் நடைபெற்றது. அவரது வருகையை ஒட்டி இளையோர் மற்றும் சிவில் சமூக அமைப்புகளால் ஜீன் 23 முதல் ஜீன் 25 வரை மூன்று நாட்களுக்குத்

**கட்டுரையாளர்:**
**கிளிநொச்சியில் இருந்து**
**- கருணாகரன் -**



தொடர்ச்சியாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இருந்தாலும் இவை போதாது மட்டுமல்ல, தொடர்ச்சியற்றவையும் கூட.

ஆனால், இந்தப் புதைகுழி விவகாரத்தை தமிழ்த்தரப்புகள் சரியாகக் கையாண்டால், அது அரசாங்கத்துக்கு பாரிய நெருக்கடியைக் கொடுப்பது மட்டுமல்ல, இலங்கைப் படையினரின் மனித உரிமை மீறல்களுக்கான தண்டனையை அளிப்பதற்கான அடிப்படையையும் உருவாக்கும். ஏனென்றால், இது சட்டரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பலமான ஒன்றாகியுள்ளது.


யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் இந்த இடத்தை அதிகாரப்பூர்வமாக ஒரு மனிதப் புதைகுழியாக பிரகடனப்படுத்தி, தொடர் அகழ்வுகளுக்கான சட்டபூர்வ உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அகழ்வுப் பணிகளுக்கான நிதிக்குக் கூட விரும்பியோ விரும்பாமலோ அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆகவே இவை இரண்டும் சட்டரீதியாகப் பலமானது. ஐ.நா. மனித உரிமையாளரின் கள விஜயமும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அவதானிப்பும் சர்வதேசக் கவனத்திற்குரியவை. ஆகவே இது சர்வதேச ரீதியாகவும் கவனத்திற்குரியதாகிறது.

ஆனாலும் கடந்த காலங்களில் புதைகுழிகளை விசாரித்த நீதிவான்கள் மற்றும் தடயவியல் நிபுணர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) மந்தகதியான போக்கும் நடைமுறைத் தடைகளாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. அத்துடன், அரசு நிதியை விடுவிக்க தாமதித்ததால் 2025 செப்டம்பர் முதல் 07 மாதங்கள் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. ஆகவே என்னதானிருந்தாலும் அரசாங்கம் இந்த அகழ்வில் சூழ்ச்சித்தனமாகவே நடந்து கொள்கிறது என்று புரிகிறது என்பதால் தான் தமிழ் தேசியக் கட்சிகள் ஓரளவுக்கு இந்த விடயத்தில் ஒருமுகமாக நின்று குரல் கொடுக்க வேண்டியுள்ளது. இப்போது ஓரளவுக்கு இந்த நிலை உண்டு.


ஆனால், அவற்றின் அழுத்தமும் வலுவும் போதாதுள்ளது. செம்மணி மனிதப் புதைகுழிகள் தமிழினப் படுகொலைக்கான ஆதரமாக மாறக் கூடிய ஒன்றாகவும் அது ஒரு நீதி விவகாரமாகவும் இருப்பதால், இதனைத் தமிழ்த்தரப்பு உரிய வகையில்

(20ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக நடக்கும்.





ரிஷபராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரசனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். வழக்குகளில் மெத்தனம் காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.





கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.





சிம்மராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.




கன்னிராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.





துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம். நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும்





விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி பணிகளை கவனிப்பர்.








தனுசுராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே1 சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம்நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.




மீனராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சு நடக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# இன நல்லிணக்கத்தடன் காணப்படும் ஒன்றைத் திருத்தலம் கதிர்காமம்!



இலங்கையின் புகழ்பெற்ற ஆன்மீக பூமியான கதிர்காமத்தில் வருடாந்த ஆடி வேல் விழா ஆரம்பமாவதற்கு முன்னதாக அங்குள்ள பள்ளிவாசலில் இஸ்லாமியக் கொடி ஏற்றப்படுவது நீண்டகால பாரம்பரியமாகும்.

பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள் மற்றும் வேடுவ மக்கள் என அனைத்து தரப்பினரும் ஒற்றை ஆன்மீகத் தலமாக வணங்கும் கதிர்காமத்தில், இந்த முஸ்லிம் கொடியேற்றம் நடப்பதன் பின்னணியில் பல நூற்றாண்டு கால வரலாற்று மற்றும் ஆன்மீகக் காரணங்கள் உள்ளன.

இஸ்லாமிய மரபுகளின்படி, கதிர்காமம் என்பது 'அல்-கிள்ர்' என்ற புகழ்பெற்ற ஆன்மீக இறைத்தூதர் வாழ்ந்த மற்றும் 'ஜீவ நதியை' கண்டறிந்த புனித பூமியாகக் கருதப்படுகிறது. இதனால் இஸ்லாமியர்கள் கதிர்காமத்தை 'கிள்ர்-காம' என்றும் அழைக்கிறார்கள். ஜஉடயஅ

பிற்காலத்தில் இந்தியாவில் இருந்து வந்த பல சூஃபி ஞானிகளும், இஸ்லாமியப் பெரியார்களும் இந்த இடத்தைத் தேடி வந்து தவம் இருந்தனர். அவர்களில் மிக முக்கியமானவர் 'ஹயாத்து நபி' மற்றும் 'பால்குடி பாவா' போன்றோராகும்.

அவர்கள் தங்கியிருந்த எளிய குடிசைகளே இன்று கதிர்காமப் பள்ளிவாசலாகவும் தர்காவாகவும் மாறியுள்ளன. இதனால் இந்த இடம் முஸ்லிம்களுக்கும் மிக முக்கியமான புனிதத் தலமாக மாறியது.

கதிர்காமத்தின் பிரதான ஆடி உற்சவம் உத்தியோகபூர்வமாகத் தொடங்குவதற்கு முன்னதாக, கதிர்காமப் பள்ளிவாசலில் 'கொடியேற்றம்' நிகழ்த்தப்பட வேண்டும் என்பது எழுதப்படாத மரபு.

இந்த இஸ்லாமியக் கொடியேற்றம் மற்றும் துஆப் பிரார்த்தனைகள் முடிந்த பின்னரே, கதிர்காம மகா தேவாலயத்தின் பிரதான திருவிழா சடங்குகள் முறைப்படி ஆரம்பமாகும்.

திருவிழாவின் இறுதி நாளில் மாணிக்க கங்கையில் நடைபெறும் 'தீர்த்த உற்ஸவம்' மற்றும் பள்ளிவாசலின் இறுதிப் பிரார்த்தனைக்குப் பின்னரே இந்தக் கொடி இறக்கப்பட்டு விழா நிறைவடையும்.

இலங்கையில் பல்லின மக்களும், பல சமயத்தவர்களும் எவ்வித வேறுபாடும் இன்றி ஒன்றாகக் கூடி வழிபடும் மிக அரிய திருத்தலங்களில் கதிர்காமம் முதன்மையானது.

கதிர்காமத்தின் பாதுகாவலரான 'பஸ்நாயக்க நிலமே' மற்றும் இந்துப் பூசகர்கள், பௌத்த பிக்குகள் முன்னிலையில் இந்த முஸ்லிம் கொடியேற்றம் நடைபெறும். வரலாற்றில், முஸ்லிம் பெரியார்கள் கதிர்காமத் தேவாலயத்தின் நிர்வாகத்துடனும், அங்கு வந்த இந்து-பௌத்த பக்தர்களுடனும் மிகவும் இணக்கமாகச் செயல்பட்டு வந்தனர்.

அதன் தொடர்ச்சியாகவே இன்றும் அனைத்து சமயத் தலைவர்களின் ஆசியுடன் இந்தக் கொடியேற்றம் மத நல்லிணக்கத்தின் அடையாளமாகப் பேணப்பட்டு வருகிறது. கதிர்காமத்தில் முஸ்லிம் கொடியேற்றம் என்பது ஏதோ அண்மையில் தொடங் கிய ஒன்றல்ல. அது கதிர்காமத்தின் ஆதி ஆன்மீக வரலாற்றுடனும், 'அல்-கிள்ர்' என்ற சூஃபி பாரம்பரியத்துடனும் இலங்கையின் உன்னதமான பன்முகப் பண்பாட்டுடனும் பிணைக்கப்பட்ட ஒரு புனிதமான பின்னணியைக் கொண்டதாகும்.

# செம்மணியில் இதுவரை 499 மனித எலும்புக்கூடுகள் மீட்பு

இலங்கையில் மிக பெரிய மனித புதைகுழியாக செம்மணி மனித புதைகுழி மாறியுள்ள நிலையில் 499 மனித எலும்புக்கூடுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணி சித்துபாத்தி மனித புதைகுழி அகழ்வின் மூன்றாம் கட்டத்தின் 45வது நாளான நேற்று 06 ஆகஸ்ட் 2026 வரை 8 மனித எலும்பு குவியல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 5 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தமாக 494 மனித என்பு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன .

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் நடைபெற்ற அகழ்வு பணிகள் இடம்பெற்றன. சட்டத்தரணிகள், பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர், சட்ட வைத்திய அதிகாரி, தொல்பொருளியல் துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணிகள் பங்கு பற்றியிருந்தனர்.

இதேவேளை திருகோணமலை மூதூரில் 17 நிவாரணப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உண்மையையும் நீதியையும் இழப்பீட்டையும் கால தாமதமின்றி உடனடியாக வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி, இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் தீவிரமடைந்திருந்த சூழலில், மூதூரில் பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தின் அலுவலக வளாகத்தில் 17 நிவாரணப் பணியாளர்கள் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்

# தமிழ் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம்!

## விவாதத்திற்கான சில குறிப்புக்கள் - 01

**கட்டுரையாளர்:**
**– கருணாகரன் –**

போருக்குப் பின்னரான ஈழத்தமிழர் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம் (Leadership Vacuum) ஏற்பட்டுள்ளதா? இந்தக் கேள்வி பலருடைய உள்ளுணர்விலும் உண்டு. தமிழ் மக்களின் மத்தியில் இன்று பல அரசியற் கட்சிகள் உள்ளன. இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் போதே ஒரு புதிய கட்சி உருவாகிக் கொண்டிருக்கலாம். அந்தளவுக்கு நாளொரு வண்ணம் பொழுதொரு மேனி என்ற மாதிரிக் கட்சிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

கட்சிக்குள்ளே ஒரு சிறிய பிரச்சினை, ஒருவர் எதேச்சையாகத் தும்மி விட்டாலே போதும் அதை ஒரு காரணமாகவோ சாட்டாகவோ வைத்துக் கொண்டு சிலர் உடனடியாகவே ஒரு கட்சியைத் தொடங்கி விடுவார்கள். அதற்குத் தோதாக முன்னொட்டாக 'தமிழ்த்தேசிய' என்ற ஒரு சொல்லைச் சேர்த்து விட்டால் போதும். அதுவும் ஒரு கட்சி. இப்படி உருவாக்கப்படும் பல கட்சிகளுக்கும் பல தலைவர்கள் உள்ளனர். ஆனால், தமிழ்ச் சமூகம் தன்னுடைய தலைமை இது தான் என்று அடையாளப்படுத்தக் கூடிய நிலையில் அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு இன்று ஒரு தலைமைத்துவம் உண்டா? என்பது கேள்வியே.

இதற்கான காரணம் என்ன? இதை எப்படி நிவர்த்தி செய்யலாம்? இதை யார் செய்வது? இதற்கான பொறுப்பு யாரிடம் உண்டு? தலைமைத்துவம் இல்லை என்பதற்கான காரணம் —

2009க்குப் பிந்தைய அரசியல் சூழலைப் புரிந்து கொண்டு யதார்த்தமான முறையில் அரசியலை முன்னெடுக்கும் தலைமை தமிழ்த்தரப்பில் உருவாகவில்லை. சிங்களத் தரப்பிலும் தான். குறைந்த பட்சம் தனி ஈழத்துக்கான போராட்டமும் போரும் என்ன காரணத்தினால் ஏற்பில்லாமல் போனது என்ற விளக்கத்தை எவரும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

சிலர் விடுதலைப் புலிகளின் அணுகுமுறை, அவர்களுடைய அரசியற் செயற்பாடுகளில் தவறு என்று சொன்னாலும் அது எப்படியானது என்பதை வரையறை செய்ததில்லை. மட்டுமல்ல, அதற்குப் பதிலாக மாற்று அரசியல் வடிவம் என்ன? அதனுடைய செயல்முறை என்ன என்பதையும் சொல்லவில்லை. ஆக ஒரு மந்த நிலையே தமிழ் அரசியல் சூழலில் நிலவுகிறது. அதனுடைய பலவீனத்தையே நாம் கண்டு கொண்டிருக்கிறோம். மக்கள் இதனைத் தெளிவாகக் கண்டு கொண்டார்கள். அதனால் தான் அவர்கள் NPP யின் மீது நம்பிக்கை கொள்ளும் நிலை ஏற்பட்டது.

இதேவேளை 2009க்குப் பிறகு அப்படி ஒரு தலைமைத்துவம் உருவாகக் கூடிய நிலையை தமிழ்ச் சமூகம் நிராகரித்தும் மறுத்தும் வந்திருக்கிறது. 2009க்குப் பிறகு மிக உணர்ச்சிகரமான நிலையில் தமிழ்ச் சமூகம் இருந்தது. ஒன்று, கடந்த காலப் படிப்பினைகளின் அடிப்படையில் ஒரு புதிய அரசியலை — யதார்த்த அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்ற அடிப்படையில். மற்றது, இதற்கு மாறான வகையில், நடந்த தோல்வி அல்லது ஏற்படுத்தப்பட்ட இழப்புகள், பாதிப்புகளின் கொந்தளிப்பினால், மிகுந்த உணர்ச்சி வசப்பட்டிருந்தது. அது எந்த வகையிலும் இலங்கை அரசுக்கு மன்னிப்பே இல்லை. இழப்புகளுக்கும் பாதிப்புகளுக்கும் ஏற்ற வகையில் தீர்வு கிட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தது. இந்த இரண்டு நிலைப்பாட்டுக்கும் புலம்பெயர் சூழலிலும் ஆதரவுச் சக்திகள் இருந்தன. ஆனால் தமிழ் ஊடகங்களைச் சேர்ந்தவர்களும் அரசியல் ஈடுபாட்டைக் கொண்ட தமிழ்ப் புத்திஜீவிகளும் இதில் எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பது என்று தெரியாத தடுமாற்றத்தோடிருந்தனர்.

2009க்குப் பிறகான சூழலை நேர்மையோடும் நீண்ட தூரக் கண்ணோட்டத்தோடும் சிங்களத் தரப்பும் அணுகவில்லை. கையாளவும் இல்லை. குறிப்பாக 2009க்குப் பிறகு ஆட்சியிலிருந்த ராஜபக்ஸவினர், மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் இலங்கை அரசியலில் மூத்தவர்கள் என்ற வகையிலும் நீண்டகால அனுபவங்களைக் கொண்டவர்கள் என்ற அடிப்படையிலும் சரியாக நடந்து கொள்ளாமல் விட்டது பாரதூரமான தவறாகும்.



இதனால் தமிழ் அரசியல் மீண்டும் தீவிர நிலையை நோக்கி உந்தப்பட்டது. அரசு மீதும் சிங்களச் சமூகத்தின் மீதும் நம்பிக்கையை இழந்தது. குறிப்பாக பரிகார நீதி, நல்லிணக்கம், பகை மறப்பு போன்ற ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தாலே தமிழ் அரசியலின் போக்கை மென்னிலைப்படுத்தியிருக்க முடியும். அவர்கள் தோற்கடிக்கப்பட்ட சமூகத்தைப் பலவீனமான தரப்பு என்ற வகையிலேயே அணுகினர். கூடவே, தலைமைத்துமில்லாத ஒரு சமூகமாக தமிழர்களை மாற்றுவதில் முனைப்புக் காட்டினர். இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பற்றிப் பேசாமல், தமிழ்ச் சமூகத்தின் நாளாந்த வாழ்க்கை நெரு. க்கடிகளுக்குள்ளாலும் தமிழ்ப் பிரதேசங்களில் அபிவிருத்தி என்ற பேரினாலும் அதனைக் கரைத்து விட முயன்றனர்.

ஆயிரம் குறைபாடுகளுக்கு மத்தியிலும் 2009க்குப் பின்னரான அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயற்பட்டவர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரான மறைந்த இராசமாணிக்கம் சம்பந்தன் ஒருவரே. அவர் தமிழ் அரசியற் பரப்பில் இருந்த காலத்தில் அவரைக் கடுமையாக விமர்சனம் செய்தவர்களில் இந்தக் கட்டுரையாளரும் ஒருவர் தான். சம்பந்தனிடம் ஜனநாயகப் போதாமையும் விரிவான சிந்தனையற்ற நிலையும் இருந்ததுண்டு. குறிப்பாகத் தன்னுடைய நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்தி, அதில் தான் உறுதியாக நிற்கிறேன், அப்படி நிற்க வேண்டிய சூழல் உள்ளது என்ற காரணங்களை அவர் வலிமையாக முன் வைக்கவில்லை. தன்னுடைய நிலைப்பாட்டை அல்லது அரசியல் தெரிவை பலப்படுத்துவதற்கு தமிழ்த் தரப்பில் ஆதரவுச் சக்திகளைத் திரட்டிக் கொள்ள வேண்டும் என்பதையும் அவர் புரிந்து கொள்ளவில்லை.

இதனால் அவருடைய நிலைப்பாட்டையும் அவருடைய அரசியல் தெரிவையும் அவருடன் கூட நின்றவர்களே சந்தேகிக்கும் நிலை ஏற்பட்டது.

ஆனால், தமிழ்ச் சமூகத்தின் அரசியல் உரிமைகள், பாதிப்புகள் பற்றிய விடயங்களில் சம்பந்தன் விட்டுக் கொடுப்பற்ற வகையில் பாராளுமன்றத்திலும் வெளியே சிங்களச் சமூகத்தின் முன்னிலையிலும் பேசியிருக்கிறார். அவ்வாறே சர்வதேச சமூகப் பிரதிநிதிகளுடனான உரையாடல்களிலும் தமிழ் மக்களுடைய நியாயத்தையும் நிலைப்பாட்டையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இதற்கான தீர்வாக அவர் சர்வதேச சமூகத்தின் பங்களிப்போடு அல்லது ஆதரவோடு இலங்கை அரசிடமே தீர்வை எதிர்பார்த்தார்.

எந்த நிலையிலும் இலங்கை அரசுடனும் சிங்களச் சமூகத்துடனுமே இணக்கப்பாட்டுக்கும் தீர்வுக்கும் செல்ல வேண்டும் என்பதைச் சம்பந்தன் புரிந்திருந்தார். இதனால் தான் அவர் விடுதலைப் புலிகள் வேறு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேறு. அவர்கள் தனிநாட்டைக் கோரினார்கள். நாம் (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு) ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான தீர்வைக் கோருகிறோம் என்று சொன்னார்.

குறிப்பாக 'இலங்கை அரசையும் சிங்களச் சமூகத்தையும் அவர் எதிர் நிலையில் நிறுத்துவது ஆபத்தானது மேலும் தமிழ் பேசும் மக்களுக்கு சேதங்களையும் நெருக்கடியையும் உண்டாக்கும்' என்பதைச் சரியாகவே புரிந்து கொண்டிருந்தார். இதனை, இத்தகைய ஒரு நல்வாய்ப்பைச் சிங்களச் சமூகம் புரிந்து கொண்டு செயற்படத் தவறியது. இது இலங்கைக்குப் பேரிழப்பாகும்.

ஆகவே சம்பந்தன் தான் 2009க்குப் பிந்திய யதார்த்தத்தையும் இலங்கைத் தீவின் அரசியல் நிலவரத்தையும் ஓரளவுக்குப் புரிந்து கொண்டு செயற்பட்டவர். இலங்கையின் இனப்பிரச்சினையில், தமிழ்பேசும் மக்களுக்கான தீர்வில் இன்றைய இந்தியாவின் அரசியல் ஈடுபாட்டு எல்லை என்ன என்ற புரிதல் சம்பந்தனுக்கிருந்தது. அவ்வாறே சர்வதேச சமூகத்தின் ஈடுபாட்டு, அதிகார எல்லைகளைக் குறித்தும் சம்பந்தனுக்கு விளக்கம் இருந்தது.

சம்பந்தனுடைய அணுமுறை புத்திபூர்வமானது. யதார்த்தத்தை உணர்ந்தது. அதைச் சேதமாக்கியது, அவருடைய தனிப்பட்ட குறைபாடுகளும் பலவீனங்களும் என்றால், அதே அளவுக்கு அவருடைய அணுமுறையையும் நிலைப்பாட்டையும் ஏற்றுக் கொள்ள மறுத்த தமிழ்த் தரப்பின் எதிரணியினர் ஆகும்.

குறிப்பாக தீவிரத் தமிழ்த்தேசியவாதிகள். அவர்கள் யதார்த்தத்தையும் உண்மையையும் ஏற்க மறுத்து, உணர விரும்பாமல் சம்பந்தனைத் துரோகியாக்கினர். அறிவார்ந்து சிந்திப்போரையும் யதார்த்தவாதிகளையும் துரோகிகளாகச் சித்திரித்து மகிழ்வது தீவிரத் தமிழ்த்தேசியவாதத்தினரிடம் உள்ள பொதுப்பண்பாகும். சுய இன்ப அரசியல்வாதிகளுக்கு இதற்கு மேல் சிந்திக்க முடியாதல்லவா! அவர்கள் சம்பந்தனை தமிழ் மக்களின் எதிரியாக்க முற்பட்டனர். சம்பந்தன் இறந்த போது காத்திருந்து அவரை எப்படிப் பழி வாங்கினர் என்பது, அவருடைய மரணத்தின் போது அவர்கள் நடந்து கொண்ட முறைமை சிறப்பாக வெளிப்படுத்தியது. அவரைத் தனிமைப்படுத்தி, எள்ளி நகையாடினர். இப்படிச் செய்ததன் மூலம் சம்பந்தனுடைய அரசியல் நிலைப்பாட்டை, அவருடைய வழிமுறையில் முன்னெடுப்போருக்கு எச்சரிக்கையை ஊட்டினர். அப்படியானவர்கள் சம்பந்தனுக்கு நேர்ந்ததைப் போல மரணத்தின் போது கூட மரியாதை குறைக்கப்படும் என்ற கீழ்மையை வெளிப்படுத்தினர். இந்தச் செயல் வரலாற்றில், அவர்களுடைய முகத்தில் எச்சிலையே துப்பும்.

இதையெல்லாம் கடந்து சம்பந்தன் தான் சிங்களச் சமூகத்திடமும் சர்வதேச அரங்கிலும் மதிக்கக்கூடிய தலைவராக இருந்தார் இன்னும் இருக்கிறார். அதற்குக் காரணம், சம்பந்தனுடைய நிலைப்பாடும் அதில் அவர் கொண்டிருந்த உறுதியுமே. ஆனால், துரதிருஸ்டவசமாக சம்பந்தனை, அவருடைய அரசியலை, அணுகுமுறையை அவருடன் கூட இருந்தவர்களே பலப்படுத்தவில்லை. ஓரளவுக்குச் சுமந்திரன் சம்பந்தனுக்கு ஆதரவாக இருந்தார். இதனால் சுமந்திரனும் துரோகி ஆக்கப்பட்டார்.

புத்திசாலிகளையும் யதார்த்தவாதிகளையும் முட்டாள்களாக்க முடியாது. வேண்டுமானால் துரோகியாகச் சித்தரிக்கலாம். அது தான் நடந்தது் நடந்து கொண்டிருக்கிறது. அடுத்ததாக, சித்தார்த்தன் சம்பந்தனுடன் நெருக்கம் காட்டினார். இந்த இருவரையும் தவிர வேறெவரும் சம்பந்தனுக்கு ஆதரவாக இருக்கவில்லை. அவர் எதிர்பார்த்த முன்னாள் வடமாகாணசபையின் முதலமைச்சர் விக்கினேஸ்வரன், சம்பந்தனை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கினார். யதார்த்தவாதியும் அறிவாளியும் துரோகியாக்கப்படுவதே தமிழ்ச் சமூகத்தின்

(22ம் பக்கம் பார்க்க)

# செம்மணி அகழ்வுகள் நீதிக்கான தேடலா? அரசியல் சடங்கா?

(17ம் பக்கத் தொடர்ச்சி) சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுத்தால், அது தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதியைப் பெற்றுத் தருவதற்கான ஒரு திறப்பைத் தரும் என்று தமிழரசுக் கட்சியின் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். அம்னெஸ்டி இன்டர்நேஷனல் (Amnesty International) போன்ற அமைப்புகள் இதற்குப் பூரண ஆதரவு வழங்குகின்றன.

ஆனால், இலங்கையில் அதிகாரத்திலிருந்த அரசாங்கங்கள் இந்த அகழ்வில் ஆரம்பத்திலிருந்தே நேரடியான சர்வதேச தலையீடுகளை மறுத்து வருகின்றன. அத்துடன் தென்னிலங்கையின் பெரும்பான்மை வாத அரசியல் சக்திகளும், இராணுவக் கட்டமைப்பும் இத்தகைய அகழ்வுப் பணிகளைத் தங்களின் வீரியமிக்க இராணுவப் பிம்பத்திற்கு' (Military Image) ஏற்படும் அச்சுறுத்தலாகவே பார்க்கின்றன. இதனால், அகழ்வுப் பணிகளைத் தொடங்குவதில் காட்டும் வேகம், அதற்கு வழங்கப்படும் ஒத்துழைப்புகள் போன்றவை அதனைத் தர்க்கரீதியான இறுதிப் புள்ளிக்குக் கொண்டு சேர்ப்பதில் இருப்பதில்லை.

நீதிமன்ற உத்தரவுகள், நிபுணத்துவக் குழுக்களின் நியமனங்கள் என அனைத்தும் சட்ட ரீதியாக நகர்வது போலத் தோன்றினாலும், போதிய நிதி ஒதுக்கீடின்மை, தடயவியல் நிபுணர்களுக்கான பாதுகாப்புச் சவால்கள், நிர்வாகத் தாமதங்கள் போன்றவற்றின் மூலம் இந்த ஒட்டுமொத்த செயல்முறையும் உள்நாட்டிற்குள் முடக்கப்படுகிறது. இதற்கான விசாரணைகள் படைத்தரப்பின் மனித உரிமை மீறல்களில் கொண்டு போய் நிறுத்தும் என்று இவை கருதுவதே இதற்கான காரணமாகும். இதனால், இது நாட்டின் இறையாண்மைக்கும் தேசிய பாதுகாப்பிற்கும் பாதிப்பு என தென்னிலங்கை அரசியல் தரப்புகள் வழமையைப் போலச் சொல்கின்றன.

சர்வதேச விசாரணைகளையும் தலையீடுகளையும் மறுப்பவர்கள், உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை விரைவுபடுத்தி, அதைச் சுயாதீன முறையில் நேர்மையாகவும் நீதியாகவும் நடத்திக் காட்ட வேண்டும். அதற்கு அவர்கள் தயாரில்லை. எனவேதான் நீதியான உள்நாட்டு விசாரணைக்கு வாய்ப்பில்லை என்று உறுதியாகச் சொல்கிறோம். ஏனென்றால், தமிழ் பேசும் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இதுவரையான எந்த அநீதிக்கும் எத்தகைய நீதியையும் நேர்மையான விசாரணைகளையும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு நிவாரணமளிக்கவில்லை. ஆகவே உள்நாட்டு நீதிப் பொறிமுறையில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து சர்வதேச நீதி விசாரணையையே கோர வேண்டியுள்ளது.

தற்போது நடைபெறுகின்ற இந்த அகழ்வுப்பணிகள் கூட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை (UNHRC), சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இலங்கை மீது செலுத்தும் அழுத்தங்களின் விளைவாகவே நடைபெறுகின்றன. இதனை மேலும் நாம் அழுத்தப்படுத்த வேண்டும். அது இயலும்.

நாடாளுமன்றத்திற்குள்ளும், உள்ளூர் மட்டத்திலும் அகழ்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு, தடயவியல் நிபுணர்களின் பாதுகாப்பு மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து சட்ட ரீதியான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

எந்தச் சூழலிலும் தமிழ்த்தேசியவாத அரசியற் கட்சிகள் இதனை வெறும் தேர்தல் கால பிரச்சாரப் பொருளாகவோ அல்லது உணர்ச்சி அரசியல் பேசுவதற்கான கருவியாகவோ சுருக்கிவிடக் கூடாது. பதிலாக இதை அவை தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசுக்குக் கொடுக்கும் அழுத்தமாகக் கையாள வேண்டும். இப்பொழுது தமிழ்த்தரப்புக்கு இவ்வாறான விடயங்களே அரசாங்கத்துக்கான அழுத்தத்தையும் சர்வதேச ரீதியான நெருக்கடியையும் கொடுக்கக் கூடிய பொறிகளாக உள்ளன. இவ்வாறான விடயங்களுக்குப் பொறுப்புக் கூறாமல் அரசு தவறுவது கடினமாகும். எனவே இதைப் புரிந்து கொண்டு தமிழ்த்தரப்பினர் பொறுப்போடும் விவேகத்தோடும் செயற்படுவது அவசியமாகும்.



நாம் மேற்படி விவரங்களுக்குப் பின்னுள்ள மேலும் சில ஆழமான உண்மைகளையும் உணர்வுகளையும் இங்கே பார்க்க வேண்டும். அதுதான் இந்த மாபெரும் மனித உரிமை மீறல் விடயத்தில் அக்கறையற்ற சமூகநிலையை மாற்றுவதற்கும் தமிழ் அரசியற் தரப்புகளின் அடுத்த கட்டச் செயற்பாடுகளுக்குத் தூண்டுவதற்கும் உதவும். அப்படிச் செய்யவில்லை என்றால், இந்த விவகாரமும் கால நீட்சியில் கைவிட்ட ஒன்றாகிவிடும்.

உண்மையில் செம்மணி விவகாரத்தின் மிக உறைப்பான பக்கம் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் தரப்பில் தேங்கிக்கிடக்கும் ஆறாத துயரமும் ஏமாற்றமுமாகும். செம்மணி என்பது வெறும் ஒரு புவியியல் பகுதியோ அல்லது ஒரு குற்றவியல் நிருபணக் களமோ அல்ல் அது மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடரும் பாதிக்கப்பட்ட மக்களுடைய கூட்டு மனவடுக்களின் (Collective Trauma) வாழும் சாட்சியமாகும்.

இதனால் தான் ஒவ்வொரு முறை செம்மணியில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும் போதும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாயாரும் உறவினர்களும் தங்களின் எஞ்சிய வாழ்நாளுக்குள் உண்மை தெரிந்து விடாதா என்ற ஏக்கத்துடன் அந்த மண்ணை நோக்கி ஓடுகிறார்கள். மறுபக்கத்தில் இந்த அகழ்வாராய்ச்சிகள் அனைத்தும் முறையான சர்வதேசத் தரத்துடனோ அல்லது பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்புடனோ நடத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு தொடக்கம் முதலே வலுவாக உள்ளன.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவைப்படுவது அரசியல் லாபங்களுக்காக அவ்வப்போது நடத்தப்படும் கண்துடைப்பு நாடகங்கள் அல்ல. மாறாக, தங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை. அதற்கான நியாயம். அதற்கான நிலைமாறுகால நீதி (Transitional Justice) மட்டுமே. அதை அரசாங்கம் செய்வதற்கான எந்த நம்பிக்கையும் இல்லை. அதற்கான சாயல்களே கண்ணுக்குத் தெரியவில்லை.

இன்று செம்மணி மனிதப் புதைகுழி விவகாரமானது இலங்கையின் போருக்குப் பிந்தைய நல்லிணக்கச் செயல்முறையின் (Reconciliation) உண்மையான யோக்கியதையை உரசிப் பார்க்கும் ஒரு முக்கிய காரணியாக நமக்கு முன்னே உள்ளது. இதனை நாம் சவாலுக்குட்படுத்துவதே அரசியல் வெற்றியும் நீதியைப் பெறுவதற்கான வழியுமாகும்.

ஆகவே, மனிதப் புதைகுழிகளை அகழ்வது என்பது வெறும் எஞ்சிய தடயங்களை மீட்டெடுக்கும் ஒரு சடங்காக (Ritual) நின்றுவிடக் கூடாது. அது கடந்தகாலக் குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலையும், பாதிக்கப்பட்ட சமூகத்திற்கான தார்மீக நீதியையும் நோக்கிய நேர்மையான பயணமாக மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும்.

உள்நாட்டு அரசியல் வாக்கு வங்கிக் கணக்குகளுக்காகவும், சர்வதேச சமூகத்தின் தற்காலிகக் கண்துடைப்பிற்காகவும் விசாரணைகளையும் அகழ்வுகளையும் அரசாங்கம் இழுத்தடிப்பது, பாதிக்கப்பட்ட மக்களின் கூட்டு மனவடுக்களை மேலும் ஆழமாக்குமே தவிர, ஒரு போதும் நிலையான அமைதியைக் கொண்டு வராது. முறையான சர்வதேசக் கண்காணிப்பு, தடயவியல் நிபுணத்துவம், அரசியல் தலையீடற்ற நீதித்துறை ஆகியவற்றின் மூலமே செம்மணியின் உண்மை வெளிவர முடியும்.

கடந்த காலத்தின் கொடூரமான பக்கங்களை நேர்மையுடன் எதிர்கொள்ளத் துணியாத எந்தவொரு நாடும், எந்தச் சமூகமும் ஆரோக்கியமான ஜனநாயக எதிர்காலத்தை நோக்கி நகர முடியாது. ஜனநாயகத்தை நோக்கி நகர முடியாத எந்த நாடும் முன்னேற்றத்தை எட்டவும் முடியாது. அரசியல் அமைதியையும் வெற்றியையும் பெறவும் முடியாது. மட்டுமல்ல, வெளி அழுத்தங்கள், நிர்ப்பந்தங்களுக்குட்படாமல் சுயாதீனமாகப் பயணிக்கவும் முடியாது. நடந்தவற்றுக்குப் பரிகார நீதியைக் காண்பதென்பது உயரிய பண்பாட்டுச் செயலும் நீதியின் பாற்பட்ட மாண்புப் பணியுமாகும். எனவே, செம்மணி அகழ்வுகள் வெறும் அரசியல் சதுரங்கக் காய்களாக சுருக்கப்படாமல், தமிழ் மக்களின் தசாப்த கால நீதிக்கான போராட்டத்திற்கு நியாயமான பதிலை வழங்கும் ஒரு திருப்புமுனையாக அமைய வேண்டும். அதுவே, இந்தத் தீவில் உண்மையான நல்லிணக்கத்திற்கும் அமைதிக்கும் அடித்தளமாக அமையும். ஆனால் இந்த உண்மை தெரிந்தாலும் இலங்கை அரசோ, சிங்கப் பெரும்பான்மை மனப்பாங்கோ இதைச் செய்வதற்கு இடமளிக்காது. இது தான் துயரமும் வெட்கக்கேடுமாகும். இதைக் குறித்துச் சிங்களச் சமூகத்தினர் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். (இவ்வாறு தமிழ்த்தரப்பும் பொறுப்புடன் சிந்திக்க வேண்டிய விடயங்களும் பரிகாரம் காணவேண்டிய பக்கங்களும் உள்ளன என்பதையும இந்தக் கட்டுரை ஒப்புரைக்கிறது).

ஆகவே, இதனை தமிழ் அரசியல் கட்சிகளும் இலங்கையின் மனித உரிமைவாதிகளும், தமிழ்ச் சிவில் சமூகமும் உரிய முறையில் முன்னெடுக்க வேண்டும். அதற்கான வேலைத் திட்டமொன்றை வரைந்து கொள்வது அவசியம். அதில், செம்மணி விவகாரம் தொடர்பான சாட்சியங்கள், முந்தைய நீதிமன்ற அறிக்கைகள், தற்போதைய அகழ்வுத் தரவுகளை எல்லாம் எந்தவிதமான அரசியல் கலப்புமின்றி, துல்லியமாக ஆவணப்படுத்த வேண்டும். எதிர் காலத்தில் சர்வதேச நீதிமன்றங்களில் இவை முதன்மைச் சான்றுகளாக மாற்றப்படக் கூடிய அடிப்படைகளை இந்த ஆவணம் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் மேடை ஏறுவதை விட, முன்னிலைப்படுவதை விட அல்லது முன்னிலைப்படுத்தப்படுவதை விட பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உண்மையான கோரிக்கைகளையும் அவர்களின் கூட்டு மனவடுக்களையும் பொது வெளிக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் வேலைகளைச் சிவில் அமைப்புகள் முன்னெடுக்க வேண்டும். இதில் ஊடகங்களும் சமூக வலைத்தளப் பதிவர்களும் பொறுப்புணர்வோடு செயற்படுவது அவசியம். அவரவருக்குத் தோன்றும் வகையிலோ அவரவர் கொண்டிருக்கும் அரசியல் விருப்பு வெறுப்புகளின் அடிப்படையிலோ செயற்படாமல் பாதிக்கப்படடோருக்கான நீதியைப் பெறுதல் என்ற அடிப்படையில் ஒரு கூட்டுச் செயற்பாட்டில் இருக்கிறோம் என்ற உணர்வுடன் செயற்படுவது அவசியமாகும்.

தமிழ் அரசியற் கட்சிகள் வெவ்வேறு அரசியல் அணிகளாகப் பிரிந்திருந்தாலும், மனிதப் புதைகுழி மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், நிலமீட்பு, அரசியற் கைதிகள் விடுதலை போன்றவற்றிலும் பாதிக்கப்பட்டோருக்கான நீதிகோரல், அரசியற் தீர்வு போன்றவற்றில் அனைத்துத் தரப்புகளும் ஒருமித்த குறைந்த பட்சக் கொள்கை அடிப்படையில் (Common Minimum Program) ஒன்றிணைந்து நிற்க வேண்டும் குரல் கொடுக்க வேண்டும்.

ஏனென்றால், இலங்கையின் பேரினவாத ஆதிக்கச் சூழலும் தற்போதைய மனித உரிமைச் சூழலும் உள்நாட்டுப் பொறிமுறைகள் (Domestic Mechanisms) எல்லாவற்றையும் பலவீனமாக்குவன. எனவே, உள்ளூர் தடயவியல் துறையினருக்கு இருக்கும் அரசியல் மற்றும் நிர்வாக அழுத்தங்களை முறியடிக்க, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் மூலமாக சர்வதேச தடயவியல் நிபுணர்கள், சர்வதேசக் கண்காணிப்பாளர்களின் நேரடிப் பங்களிப்பைக் கோர வேண்டும். மனித உரிமை சட்டத்தரணிகள் ஊடாக இந்த அகழ்வுப் பணிகளை சுயாதீனமான நீதிமன்றக் கண்காணிப்பின் கீழ் (Judicial Oversight) கொண்டு வருவதற்கான சட்டப் போராட்டங்களை தீவிரப்படுத்த வேண்டும்.

அடுத்ததாக புலம்பெயர் மக்கள் தாங்கள் வாழும் நாடுகளின் (UK, கனடா, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, (22ம் பக்கம் பார்க்க)

# இடம் மாறும் சீனாவின் முகம்

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இலங்கையை தங்களின் மூலோபாய கேந்திரமாக பார்க்கின்ற உலகின் இரண்டு முக்கிய நாடுகளின் கொழும்பில் உள்ள தூதரகங்களில் இப்போது தூதுவர்கள் யாரும் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கத் தூதுவராக நான்கு ஆண்டுகள் பணியாற்றிய ஜூலி சங், தனது பணிக் காலத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பி, 6 மாதங்களுக்கு மேலாகியும், புதிய தூதுவர் இன்னமும் பொறுப்பேற்கவில்லை.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக பெயரிடப்பட்ட எரிக் மேயரின் நியமனத்திற்கு அமெரிக்க செனட் கடந்த மே 18ஆம் திகதி, 46-43 என்ற வாக்குகள் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கியது. ஆயினும், அவர் இன்னும் இலங்கைக்கு வந்து பதவியைப் பொறுப்பேற்கவில்லை.

இந்தச் சூழலில், அமெரிக்க தூதரகத்தில் பதில் தூதுவராக கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் பணியாற்றி வந்த ஜெய்ன் ஹொவெலின் பதவிக் காலமும் நிறைவடைகிறது.

இலங்கை மீது உன்னிப்பான கவனத்தைக் கொண்டுள்ள அமெரிக்காவின் நிலை இப்படியென்றால், இன்னொரு பக்கத்தில் சீனத் தூதுவராக ஆறு ஆண்டுகள் பணியாற்றிய கீ சென்ஹொங் ஜூலை 31ஆம் திகதியுடன் தனது பணியை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருக்கிறார்.

கடந்த ஆறு ஆண்டுகளாக இலங்கையில் சீனாவில் முகமாக பார்க்கப்பட்டவர் அவர். இலங்கையர்கள் மத்தியில் சீனா என்றதும் அண்மைக் காலமாக அவரது முகமே முதலில் நினைவுக்கு வரும் அளவுக்கு அவர், நீண்டகாலம் இலங்கையில் பணியாற்றியிருக்கிறார்.

அது மாத்திரமன்றி, அவர் எல்லா மட்டங்களிலும் தொடர்புகளை ஏற்படுத்தி, தன்னை இலங்கையர்களுக்குப் பரிச்சயமான ஒருவராக மாற்றுவதிலும் வெற்றி கண்டிருக்கிறார்.

1988ஆம் ஆண்டு சீன இராஜதந்திர சேவையில் இணைந்து கொண்ட அவர், 61 வயதிலும் சுறுசுறுப்பான இளைஞர் போல கொழும்பில் சீனத் தூதரகத்தை வழிநடத்தியிருந்தார்.

அமெரிக்கா மற்றும் இந்தியாவின் மறைமுகமான இராஜதந்திரப் போரை அவர் எதிர்கொண்ட விதம் அசாதாரணமானது.

கொரோனா நெருக்கடியில் முழு உலகமும் சிக்கியிருந்த போது, 2020 ஆம் ஆண்டு இலங்கைக்கு தூதுவராக நியமிக்கப்பட்ட கீ சென்ஹொங், அன்று முதல் பதவியிலிருந்து விலகிச் செல்லும் வரை, கடுமையான சவால்களுக்கும் மத்தியில், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை கட்டி எழுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். சீனாவைப் பொறுத்தவரையில், வெளிநாடு ஒன்றில் தனது தூதுவரை ஆறு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்ற அனுமதிப்பது அரிதான விடயம். 3 தொடக்கம் 4 ஆண்டுகள் மாத்திரமே, ஒரு நாட்டில் தனது தூதுவரை பணியாற்றுவதற்கு சீனா அனுமதிக்கும்.


அதுவும், மூலோபாய முக்கியத்துவம் மிக்க இடங்களில்- மிகச் சிறப்பாக பணியாற்றிய சில தூதுவர்கள் மாத்திரமே, 5 ஆண்டுகள் பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையைத் தாண்டி கீ சென்ஹொங், இலங்கையில் 6 ஆண்டுகள் பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இது ஒன்றே அவரது இராஜதந்திரப் பணிக்கான தகுதியை- முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. அவர் இலங்கையில் சீனாவின் நலன்களை உறுதிப்படுத்துவதற்காக, எந்தளவுக்கு பணியாற்றி இருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

சீனத் தூதுவர் கீ சென்ஹொங், கொழும்பில் ஷங்ரி லா விடுதியில் கடந்த 23ஆம் திகதி, சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 99 ஆவது ஆண்டு நிறைவு விழாவை தனது பிரியாவிடை நிகழ்வாகவும் நடத்தியிருந்தார். அதில் உரையாற்றிய போது, இலங்கையை தனது இரண்டாவது தாய் நாடு எனக் குறிப்பிட்டார். அந்தளவுக்கு அவர் இங்கு பரிச்சயமாக பழகியிருக்கிறார்.

2000 நாட்களுக்கு மேலாக தான், இலங்கையில் பணியாற்றியிருப்பதாகவும், தனது இராஜதந்திரப் பணியில் நீண்ட காலத்தை இலங்கையில் செலவிட்டிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இலங்கையை இரண்டாவது தாயகம் எனக் கூறியிருப்பதன் மூலமாக இலங்கைக்கும் தனக்கும் இடையிலான நெருக்கம் எந்தளவு உறுதியானது என்பதை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.





கொவிட் தொற்றுக் காலத்தில் இலங்கைக்கு சினோபார்ம் தடுப்பூசிகளை வழங்குவதற்கு எடுத்த நடவடிக்கை மிக முக்கியமானது. கிட்டத்தட்ட 26 மில்லியன் டோஸ் சினோபார்ம் தடுப்பூசிகளை சீனா வழங்கியது.

இது இலங்கையில் செலுத்தப்பட்ட மொத்த கொவிட் தடுப்பூசிகளில் கிட்டத்தட்ட 72 சதவீதத்திற்கும் அதிகமாகும். அதையடுத்து, பொருளாதார நெருக்கடி காலத்தில் இலங்கைக்குத் தேவையான உதவிகளை ஒருங்கிணைப்பதிலும், கடன் மறு சீரமைப்பு நடவடிக்கைகளிலும், கீ சென்ஹொங் முக்கியமான பங்களிப்பை செலுத்தியிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திசாநாயக்க என மூன்று ஜனாதிபதிகளின் பதவிக்காலத்தில், அவர் இலங்கைக்கான தூதுவராக பணியாற்றியிருக்கிறார். அவரது இந்தப் பணிகளில் சீன அரசாங்கத்துக்கு முழு திருப்தி இருந்ததால் தான் அவரால் ஆறு ஆண்டுகள் இங்கு பணியாற்றக் கூடியதாக இருந்தது.

சீனாவின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு அவர், பெய்ஜிங்கிற்கு அதிகம் தேவைப்பட்டிருக்கிறார்.

மூலோபாய நலன்களை கருத்தில் கொண்டு, சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மாத்திரம், சீனா இவ்வாறானவர்களை வெளிநாடுகளில் தூதுவராகப் பணியாற்றுவதற்கு அனுமதித்திருக்கிறது.

கீ சென்ஹொங்கிற்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டது, அவருக்கான தனித்துவத்தை மாத்திரம் காண்பிக்கவில்லை, இலங்கையுடனான சீனாவின் உறவுகளின் முக்கியத்துவத்தையும் அது தெளிவாக காண்பித்திருக்கிறது. இலங்கையுடனான உறவுகளைக் கையாளுவது அண்மைக்காலத்தில் அதிகம் சவாலானதாகவே இருந்து வந்திருக்கிறது.

இவ்வாறான சூழலில், அந்த உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு சாதகமான ஒருவரை உச்சமாக பயன்படுத்துவதற்கு சீனா விரும்பியிருக்கிறது.

சீன வெளியுறவு அமைச்சின், மிக நம்பிக்கையான மற்றும் மூலோபாய ரீதியாக வலுவான இராஜதந்திரியாக அவர் கருதப்பட்டார்.

இலங்கையின் அரசியல் தலைவர்கள், பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினருடன் மிக நெருங்கிய உறவை இவர் ஏற்படுத்தியிருந்தார். மகாநாயக்க தேரர்களுடன் மாத்திரம் அவர் உறவுகளை பேணியிருக்கவில்லை. வடக்கிற்கு பயணம் மேற்கொண்ட போதெல்லாம் நல்லூர் கந்தன் ஆலயத்திற்கும் சென்று வழிபாடு செய்தார்.

மேற்சட்டை அணியாதவர்கள் தான் ஆலயத்திற்குள் செல்ல முடியும் என்ற நல்லூர் ஆலயத்தின் மரபைக் கண்டு அவர் பின்வாங்கவில்லை. மேற்சட்டையை கழட்டி விட்டு, வேட்டியுடன் ஆலயத்திற்குள் சென்று வழிபாடு செய்கின்ற அளவிற்கு, அவர் கவர்ச்சிகரமான இராஜதந்திரியாக மாறியிருந்தார். இவ்வாறான இயல்பு, அனைத்து தரப்புகளுடனும் அவர் சீரான உறவுகளை கட்டியெழுப்புவதற்கு கைகொடுத்தது.

இது அவர் சீனாவின் நலன்களை இலங்கையில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, போதுமான தகைமையை அவர் கொண்டு இருந்தார் என்பதை காட்டுகிறது. அதனால் தான் அவரால் ஆறு ஆண்டுகள் வரை இலங்கையில் பணியாற்றும் வாய்ப்பு வழங்கப்பட்டது. பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு உதவிகளை ஒருங்கிணைப்பதில் அவர் காட்டிய அக்கறை அதிகமானது.

அதிலும் கடந்த பல ஆண்டுகளாக பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளை வழங்குவது உதவிகளை வழங்குவது போன்ற திட்டங்களின் ஊடாக சமூக மட்டத்திலும் அவர் அறியப்பட்டவராக மாறியிருந்தார் . இலங்கையில் இருந்து திரும்பியுள்ள அவருக்கு சீன வெளியுறவு அமைச்சில் உயர் பதவி அல்லது முக்கியமான நாடொன்றுக்கான தூதுவர் பதவி வழங்கப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாக கருதப்படுகிறது. அதேவேளை, இலங்கைக்கான புதிய தூதுவரை சீனா இன்னமும் அறிவிக்கவில்லை.

ஆனால், இலங்கைக்கான புதிய தூதுவராக நியமிக்கப்படுபவருக்கு கொழும்பு இலகுவான பணியாக இருக்காது.

ஏனென்றால், உலகில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கும் இலங்கையை, இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா என பல நாடுகள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

இப்படிப் பல நாடுகளின் கண்காணிப்பில் இருக்கின்ற இலங்கையில், சீன தூதுவராக பணியாற்றுபவருக்கு கூடுதல் பொறுப்பும் அழுத்தமும் இருக்கும். இங்கு சீனாவுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவதும் சவாலான விடயங்களை சமாளிப்பதும் இலகுவானது அல்ல.

இது பெய்ஜிங்கிற்குத் தெரியாத விடயம் அல்ல. எனவே கொழும்புக்கு அனுப்பப்படும் அடுத்த சீனத் தூதுவர், நிச்சயமாக கீ சென்ஹொங் போன்ற ஒருவராக இருக்க வேண்டும் என்பதில் பெய்ஜிங் அதிக அக்கறை காண்பிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

# மொராக்கோவில் என்ன தான் நடக்கிறது?

(23ம் பக்கத் தொடர்ச்சி) பொறுப்பின்மை ஆட்சியையும் கண்ட ஜென்ஸீ இளைஞர்கள், கடந்த ஆண்டு நாடு முழுவதும் போராட்டத் ஷதில் இறங்கியும் பயனில்லை. வேலையின்மை 35வீதம்; எட்டி விட்டது. 3 இளைஞர்களில் ஒருவர் வேலையில்லாமலும், படித்தவராகவும் இருக்கிறார். அதிலும் 15 முதல் 30 வயதுக்கு எள்ளான இளைஞர்களின் வேலை யின்மை 35 சதவீதமாக உயர்ந்து விட்டது.

மொராக்கோவில் மருத்துவத்தின் நிலை படுமோசம். 10,000 பேருக்கு 7.7 மருத்துவர்கள்தான். சிறு நகரங்களில் 10,000 பேருக்கு 4.4 மருத்துவர் என்ற நிலை. மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதியான தரமான மருத்துவமனைகள், பள்ளிக் கூடங்கள், உயர்கல்வி நிலையங்கள் அமைக்க அரசு ஆர்வம் காட்டவில்லை என்று இளைஞர்கள் விமர்சிக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் சமூகத்தில் பணக்காரர்கள், ஏழைகளுக்கான இடைவெளி விரிவடைவது, அதிகரி த்து வரும் ஊழல், போலீஸாரின் அடக்குமுறை ஆகியவை மக்களை தங்களின் குடும்ப எதிர்காலத்தை தேடி அகதிகளாக ஸ்பெயினுக்குள் தஞ்சமடைகிறார்கள்.

ஐரோப்பிய யூனியன் பகுதிக்குள் நுழைவதற்கு தெற்கு நுழைவுவாயில் சியூட்டா தான். சியூட்டாவுக்குள் நுழைந்து விட்டால், அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குள் சென்று வேலைவாய்ப்புகளை தேடிக்கொள்ளலாம் என்று மொராக்கோ மக்கள் இங்கு தஞ்சமடைகிறார்கள். மேலும், ஸ்பெயின் அகதிகளைக் கையாள்வதில் மென்மையான போக்கை கடைபிடிப்பதால் எப்படியாவது ஐரோப்பிய நாடுகளுக்குள் சென்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் மக்கள் சியூ ட்டாவுக்குள் வருகிறார்கள்.

ஸ்பெயின் உச்ச நீதிமன்றம் சமீபத்தில் சட்டவிரோதமாக நாட்டுக்குள் வரும் அகதிகள் குறித்து ஓர் தீர்ப்பளித்தது. அதில், 'கடலில் இடைமறிக்கப்படும் புலம்பெயர்ந்தோரை சட்ட நடைமுறைகள் இல்லாமல் உடனடியாக மொராக்கோவுக்கு திருப்பி அனுப்ப முடியாது' எனத் தெரிவித்தது. இதைத் தொடர்ந்து மனிதக் கடத்தலில் ஈடுபடுவோர் பணத்தைப் பெற்றுக் கொண்டு மொராக்கோ மக்களைக் கடலைக் கடக்க உதவியிருக்கலாம். இதனால் புலம்பெயர்ந்தோரின் திடீர் வருகை அதிகரித்துள்ளது என ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

புலம்பெயர்ந்து வருவோருக்கான கொள்கைகளை வலுவாக வைக்காததால்தான் ஸ்பெயினுக்குள் அகதிகள் வருகை அதிகரிக்கிறது என்று ஸ்பெயினின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் மீது ஐரோப்பிய யூனியன் குற்றம்சாட்டுகிறது. ஆனால் மொராக்கோ அரசு இதுவரை அதிகாரபூர்வ விளக்கம் அளிக்கவில்லை.

EELANADU 07 Aug 2026 ஈழநாடு

# தமிழ் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம்!

(19ம் பக்கத் தொடர்ச்சி) பெருங் குணமானால் இப்படித் தானே விதியிருக்கும். என்பதால் 2024க்குப் பிறகு தமிழ்ச்சமூகம் தனக்கான தலைமைத்துவத்தை இழந்து இருளுக்குள் நிற்கிறது. இதனால் இன்றைய தமிழ் அரசியற் சூழலானது, 2009க்கு முன்பிருந்த விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தைப் போலன்றி, ஒற்றை மையத் தலைமைத்துவத்தில் இருந்து கூட்டுத் தலைமைத்துவத்தை நோக்கியதாக மாற வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது.

அதற்கான தேடலில் இப்பொழுது தமிழ்ச் சமூகம் உள்ளது. ஆனால், அப்படிக் கூட்டுத் தலைமைத்துவப் பண்புடன் இயங்கக் கூடிய உளநிலையும் பயிற்சியும் ஜனநாயகப் புரிதலும் தயாரும் இன்றைய தமிழ்த்தலைவர்களிடம் இல்லை. இதை அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு செயற்பாடுகளும் நிரூபிக்கின்றன. இனரீதியாகவும் வடக்குக் கிழக்கு என்ற பிராந்திய அடிப்படையிலும் தமிழ் மக்களுக்கு அல்லது தமிழ்பேசும் மக்களுக்கு உள்ள பிரச்சினைகளையும் ஏற்படுகின்ற நெருக்கடிகளையும் புரிந்து கொண்டு, அவற்றுக்குத் தீர்வைக் காண்பதற்கான வேலைத்திட்டங்களை எவரும் உருவாக்கவில்லை. அப்படியான சிந்தனையே இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. 1977க்கு முன்பிருந்த தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவை முன்னெடுத்த அரசியலையே இன்றைய தமிழ் (தேசிய) அரசியல் தரப்பினரும் முன்னெடுக்கின்றனர். அவர்கள் பயன்படுத்திய உளுத்துப் பழுதடைந்து போன வார்த்தைகளையே இன்றையவர்களும் பயன்படுத்துகின்றனர். ஒரு புதிய சொல்லைக் கூட இவர்களால் சொல்ல முடியவில்லை என்பது எவ்வளவு பெரிய துயரம்? தமிழ்ப் பத்திரிகைகளைப் படிக்கும்போது அன்றைய (1970க்கு முந்திய) ஈழநாடு, சுதந்திரன் பத்திரிகைகளைப் படிப்பதைப் போலிருக்கிறது. ஆனால், காலமும் நிலைமைகளும் அரசியல் சூழலும் உலகமும் வேறு எங்கோ சென்று விட்டது. (தொடரும்)

# செம்மணி அகழ்வுகள் நீதிக்கான தேடலா? அரசியல் சடங்கா?

(20ம் பக்கத் தொடர்ச்சி) ஆஸ்திரேலியா) நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் மூலம் செம்மணி அகழ்வு விவகாரத்தை சர்வதேச விவாதப் பொருளாக வைத்திருக்க வேண்டும்.

சுருக்கமாகக் கூறின், உள்நாட்டில் சிவில் சமூகத்தின் ஆவணப்படுத்தல் அரசியல் தரப்புகளின் சட்டப் போராட்டம் புலம்பெயர் சமூகத்தின் சர்வதேச அழுத்தம் என்ற இந்த மூன்று முனைகளும் இணையும் போது தான், செம்மணி அகழ்வு விவகாரத்தை இலங்கை அரசு ஒரு சாதாரண சடங்காகக் கடந்துவிட முடியாதிருக்கும். இதுவே இந்த விவகாரத்தை ஒரு சர்வதேச அளவிலான, பெறுமதியான தீர்வை நோக்கி நகர்த்துவதற்கான சிறந்த வழியாகும்.

ஏனென்றால், 1990களின் பிற்பகுதியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களின் சாட்சியாகவே இந்தப் புதைகுழி பார்க்கப்படுகிறது. பல தசாப்தங்களாகத் தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் தவிக்கும் குடும்பங்களுக்கு, இந்த அகழ்வுப் பணிகள் ஒரு தீர்க்கமான உண்மை அறியும் (Truth seeking) புள்ளியாக அமைகிறது.

ஆகவே செம்மணி அகழ்வு என்பது வெறும் மண்ணைத் தோண்டுவதோ, உக்காத எலும்புக்கூடுகளை மீட்டுப்பார்ப்பதோ அல்ல் அது தமிழ் மக்களின் கூட்டு மனவடுக்களையும் (Collective Trauma), இன்னும் ஆறாத போர்க் கால நினைவுகளையும் அரசியல் பெறுமானமாக்கி, தீர்வைக் காண்பதற்கான திறப்பை உருவாக்கும் ஒரு கருவியாகும். இந்தக் கருவியைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வது தமிழ்ச் சமூகத்தின் பொறுப்பும் திறனுமாகும். ஆம், இன்னொரு பொறுப்புணர்வின் முன்பாகவும் சவாலின் முன்பாகவும் தமிழ்ச்சமூகம் நிறுத்தப்பட்டுள்ளது. என்பதால், இன்னொரு சதுரங்க ஆட்டத்தில் தமிழர் தரப்பும் இலங்கை அரசும் நிற்கின்றன. வரலாறு இரண்டு தரப்பையும் நிறுத்தியுள்ளது. நீதிக்கான தேடலா அல்லது அரசியல் சடங்கா?

# இராஜதந்திரம் பழகுதல்!

(14ம் பக்கத் தொடர்ச்சி) வெற்றி என்பது, நாம் எந்தளவிற்கு மற்றவர்களுக்கு முன்னால் பெறுமதியுடைவர்களாக இருக்கின்றோம் என்பதில்தான் இருக்கின்றது. ராஜதந்திரம் என்பது நலன்களை வெற்றி கொள்ளும் மிகப் பெரிய வியாபாரம். இந்த வியாபாரத்தில், நம்மிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லை என்றால் மற்றவர்களிடமிருந்து எதனையும் பெற முடியாது. யூத ராஜதந்திரத்தின் வெற்றி இந்த அடிப்படையில்தான் நிகழ்ந்தது. அவர்கள் தங்களை மற்றவர்களுக்குத் தேவையானவர்களாக ஆக்கிக் கொண்டனர். அவர்களை தவிர்த்துச் செல்ல முடியாது என்னும் நிலைமையை உருவாக்கினர். ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை எவரும் பிச்சையிட முடியாது. ராஜதந்திரம் என்பது பிச்சைப் பாத்திரம் ஏந்தும் செயல் அல்லமாறாக, நமது ஆளுமை கொண்டு மற்றவர்களை வசியப்படுத்தி, அவர்கள் மூலம் பெறக் கூடியதைப் பெறுவதற்கு முயற்சிப்பது.

# 5 ஆண்டுகளில் முப்படைகளிலிருந்து 34 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வெளியேற்றம்!

கடந்த ஐந்து ஆண்டுகளில் முப்படைகளிலிருந்தும் 34,000க்கும் மேற்பட்டோர் வெளியேறியுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். கடந்த ஐந்து ஆண்டுகளில் தரைப்படையிலிருந்து 31,088 பேரும், கடற்படையிலிருந்து 2,501 பேரும், விமானப்படையிலிருந்து 1,394 பேரும் வெளியேறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 2008 ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவருக்குப் தலைமறைவாக இருக்க உதவி புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் ஆஜரான முன்னாள் கடற்படைத் தளபதி ரவீந்திர விஜேகுணரத்னவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



இன்று $200,000 வரை
ஒரு புதிய வீட்டின் மீது
மிச்சப்படுத்திடுங்கள்
நாளை அது நிறைய
குடும்பங்களாகவும் நிறைய
வீடுகளாகவும் பெருகும்



புதிய வீட்டின் மீது $200,000
வரையிலும் எவ்வாறு மிச்சப்படுத்துவது
என்பதை பின்வரும்இணையப்
பக்கத்தில் அறிந்துகொள்ளுங்கள்:
ontario.ca/MoreHomesFaster

Ontario

ஒன்ராறியோ அரசாங்கத்தின்
நிதியுதவியுடன் வெளியிடப்பட்டது.

# மொராக்கோவில் என்ன தான் நடக்கிறது? ஸ்பெயினில் புலம்பெயர் அத்துமீறல்களும் பின்புலமும்!

வட ஆப்பிரிக்க நாடான மொராக்கோவில் இருந்து இரு தினங்களில் மட்டும் ஸ்பெயினின் கட்டுப்பாட்டில் உள்ள சியூட்டா தீவுக்கு ஏறக்குறைய 60,000-க்கும் மேற்பட்ட மக்கள் கடல்வழியாக அகதிகளாக புலம் பெயர்ந்துள்ளனர். அவர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளில் ஸ்பெயின் அரசு தீவிரத்துடன் செயல்பட்டு வருகிறது.

2021ம் ஆண்டில் இதேபோன்ற அகதிகள் ஊடுருவலை ஸ்பெயின் அரசு சந்தித்தது. ஆனால், முன் எப்போதும் இல்லாத இந்த அளவு அகதிகளின் சட்டவிரோத வருகையைப் பார்த்து திகைத்து நிற்கிறது. இதனால், எல்லைப் பகுதியில் கூடுதல் பாதுகாப்புப் படைகளை ஸ்பெயின் நிறுத்தியுள்ளது.

சியூட்டா, மெலிலா தீவுகள் 1580ம் ஆண்டு முதல் ஸ்பெயினின் கட்டுப்பாட்டில் தான் இருந்து வருகிறது. ஆனால், இந்த தீவுகளை உரிமை கோரி மொராக்கோ தற்போது ஸ்பெயினுடன் மோதலில் ஈடுபட்டு வருகிறது. ஏற்கெனவே ஸ்பெயின் - மொராக்கோ இடையே தூதரக உறவுகளில் உரசல் இருந்து வரும் நிலையில், இந்த புலம்பெயர்வு மீண்டும் விவாதங்களைக் கிளறியுள்ளது.

சியூட்டாவின் தாராஜல் கடற்கரையில் அரங்கேறும் காட்சிகள் ஸ்பெயின் மற்றும் இத்தாலிக்கு இடையே அரசியல் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் விசா இல்லாத 'ஷெங்கன்' பயணப் பகுதியிலிருந்து ஸ்பெயினை சஸ்பெண்ட் செய்யுமாறு இத்தாலி வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் தெற்கு நுழைவுவாயில் ஸ்பெயின். இங்கு நுழையும் அகதிகள், படிப்படியாக ஐரோப்பா முழுவதும் பரவி விடுவார்கள் என்ற அச்சத்தை இத்தாலி வெளிப்படுத்தியுள்ளது. மேலும், மிகப் பெரிய அளவிலான மக்கள் புலம்பெயர்வு என்பதால் ஒட்டுமொத்த ஐரோப்பிய யூனியனின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.



வட ஆப்பிரிக்காவின் மெக்ரிப் மண்டலத்தில் உள்ள 3.50 கோடி மக்களைக் கொண்ட சிறிய நாடு தான் மொராக்கோ. பொருளாதார வளர்ச்சியில் வட ஆப்பிரிக்காவில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தை மொராக்கோ கொண்டிருந்தாலும், கடந்த சில ஆண்டுகளாக சிக்கலான நிலையில் இருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு வரை 5.5 சதவீத வளர்ச்சியில் இருந்த மொராக்கோ நடப்பு ஆண்டில் 3 சதவீதத்தை பராமரிப்பது கடினம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வறட்சி, பஞ்சம், படித்த இளைஞர்கள் மத்தியில் வேலையின்மை அதிகரிப்பு, ஊழல், சமூகத்தில் ஏற்றத்தாழ்வு விரிவடைதல், ஏற்றுமதியில் சீரற்ற நிலை ஆகிய சிக்கல்களை மொராக்கோ கடந்த தசம ஆண்டுகளாக சந்தித்து வருகிறது. விலைவாசி ஏற்றம், அதற்கு ஏற்றார்போல் ஊதிய உயர்வு இல்லை. மக்களின் வாங்கும் சக்தி குறைந்து வறுமையின் பிடியில் சிக்கி, வாழ்க்கையை நடத்துவதில் சிரமங்களை சந்தித்து வருகிறார்கள்.

மொராக்கோ குறித்து சமீபத்தில் உலக வங்கி வெளியிட்ட அறிக்கையில், 'மொராக்கோவில் வேலை வாய்ப்பை உருவாக்காத பொருளாதார வளர்ச்சி இருக்கிறது. வளர்ச்சி இலக்குகளுக்கும், அதன் தொழிலாளர் சந்தையின் உண்மை நிலைக்கும் இடையே இடைவெளி விரிவடைந்து வருகிறது. 2020 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில், 3.70 லட்சத்துக்கும் குறைவான வேலைவாய்ப்புகளே உருவாகின. கிராமப்புறங்களில் பெண்களின் வேலைவாய்ப்பு 19வீத ஆகக் குறைந்தது, பெரிய அளவிலான பாலின இடைவெளியைச் சந்தித்துள்ளது' எனத் தெரிவித்தது.

காலநிலை மாற்றம் வேளாண் துறையைச் சிதைத்து விட்டது. 10 ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வறட்சியால் கிராமப்புறங்களில் 12 லட்சம் வேலை வாய்ப்புகள் (23வீத சரிவு) பறிபோயின. மொராக்கோவின் பொருளாதாரம் நசிந்து வருவது, மக்களின் வாழ்க்கைத் தரம் சீரழிந்து வருவது, அடிப்படை வசதிகள் கூட இல்லாததை அரசு கண்டு கொள்ளவில்லை. அதற்கு ஏற்றார்போல், மொராக்கோவின் பிரதமர் அஜிஸ் அஜானுஸ் மிகப் பெரிய கோடீஸ்வரர், தொழிலதிபர். சாமானிய மக்கள், இளைஞர்களின் வேலை வாய்ப்பு ஆகியவை பற்றி கவலைப் படாமல் மேல்தட்டு மனநிலையுடனே ஆட்சி நடத்துவாக மக்கள் விமர்சிக்கிறார்கள்

தரமான கல்வி, மருத்துவம், வேலையின்மையை போக்க நடவடிக்கை தேவை என்பதை மக்கள் கோரிய நிலையில் மொராக்கோ அரசோ மக்களின் தேவையை கருத்தில் கொள்ளவில்லை. மாறாக, 2030-ம் ஆண்டு ஃபிஃபா உலகக் கோப்பைக்காக பெரிய விளையாட்டு மைதானம் அமைக்க கோடிக்கணக்கான டாலர்களை செலவிட்டு வருகிறது.

அரசின் அலட்சியப் போக்கையும்,
(21ம் பக்கம் பார்க்க)

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation


Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை


Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# சிங்களவர்களின் வரிப்பணத்தில் செம்மணி அகழ்வா? இனவெறியைக் கக்கும் செம்மறி விமல்வீரவன்ச!



இலங்கையை குற்றச் செயல்களின் இராச்சியமாக சர்வதேசத்துக்கு காண்பிப்பதற்காக சிங்களவர்களின் வரிப்பணத்துடன் செம்மணி மனிதப் புதைக்குழி அகழப்படுகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பு சிங்களவர்களை கொன்று புதைத்த புதைகுழிகள் பற்றி காணாமல் போனோர் அலுவலகம் ஏன் கவனம் செலுத்தவில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

செம்மணி மனிதப் புதைக்குழி அகழ்வு பணிகள் தற்போது தீவிரப்படுத்தப்படுகிறது. அதற்கு நீதி கோரி கத்தோலிக்க அருட்தந்தையர்கள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இலங்கை குற்றங்கள் நிறைந்த இராச்சியம், இங்கு யுத்தக் குற்றங்களும், இனவழிப்பும் இடம் பெற்றுள்ளன என்று சர்வதேச அரங்குக்கு காண்பிக்கும் செயற்பாடுகளே தற்போது இடம்பெறுகிறது.

இந்த நாட்டில் வரி செலுத்துவதில் சிங்களவர்கள் பெரும்பான்மையானவர்களாக உள்ளார்கள். சிங்களவர்களின் வரிப்பணத்தைக் கொண்டு காணாமல் போனோர் அலுவலகம் செம்மணி மனிதப் புதைக்குழி அகழ்வு பணிகளை இந்த அரசாங்கம் வந்ததன் பின்னர் தீவிரப்படுத்தியுள்ளது.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் அரச நிறுவனமாக காணப்பட்டாலும் அது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே செயற்படுகிறது. புலிகள் அமைப்பால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சிங்கள பொலிஸார், சிங்கள மக்கள் பற்றி காணாமல் போனோர் அலுவலகம் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

இராணுவத்தின் முன்னாள் உயர் அதிகாரிகளை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கையில் இனப்படுகொலையும், யுத்தக் குற்றங்களும் இடம் பெற்றதாக சர்வதேசத்தக்கு காண்பிக்கும் போக்கு காணப்படுகிறது என்றார்.

செம்மணி சிந்துபாத்தி மயானத்தில் புதைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி வழங்க வேண்டுமெனக்கோரி யாழ்.மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அரியாலை புனித யுதாதேய சுருபம் முன்பாக காலை 10மணிக்கு ஒன்றுகூடிய மறைமாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க குருமாரும், துறவறத்தினரும் அமைதியாக செம்மணி சிந்துபாத்தி மயானம் வரையில் பேரணியாகச் சென்று நீதிகோரிக்கை விடுத்தனர்.

பேரணியில் பங்கேற்றவர்கள், செம்மணிக்கு நீதி வேண்டும், சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் மௌனம் அல்ல நீதியே தேவையை, உண்மைகள் மறைக்கப்படக்கூடாது போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியிருந்தனர். இதன் போது, செம்மணி மனிதப்புதைகுழியில் புதைக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டுமெனக்கோரி அவர்கள் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் 8 லட்சம் டொலர் மோசடி செய்து விட்டு இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற சோதிடர் பாபு!

கனடாவின் டொராண்டோவில் தன்னை ஆன்மீக சிகிச்சையாளர் மற்றும் ஜோதிடர் எனக் காட்டி, ஒருவரிடம் இருந்து சுமார் எட்டு லட்சம் கனேடிய டொலர் மோசடி செய்ததாகக் கூறப்படும் இந்தியப் பிரஜைக்கு எதிராக நாடு முழுவதும் பிடி விராந்து பிறப்பிக்கப்பட்டுள்ளதாக டொராண்டோ காவல்துறை தெரிவித்துள்ளது.

கங்காதர் பாபு என்பவர் மீது இந்த வழக்கில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. 2024 ஏப்ரல் முதல் 2025 செப்டம்பர் வரை இந்த மோசடி இடம் பெற்றதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

விசாரணையின்படி 'பாபு' என்ற பெயரில் சேவையாற்றியதாகக் கூறப்படும் சந்தேகநபர், தன்னை ஆன்மீக சக்தி கொண்டவராகவும், எதிர்காலத்தை கணிக்கும் ஜோதிடராகவும், ஆன்மீக சிகிச்சையளிப்பவராகவும் அறிமுகப்படுத்தியுள்ளார். பாதிக்கப்பட்டவரையும் அவரது குடும்பத்தினரையும் மரணம் அல்லது கடுமையான தீங்கு சூழும் என அச்சுறுத்தி, அதிலிருந்து காப்பாற்ற விசேட ஆன்மீக சடங்குகள் நடத்த வேண்டுமெனக் கூறி தொடர்ந்து பணம் பெற்றதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

கங்காதர் பாபு மீது 5,000 டொலருக்கு மேற்பட்ட மோசடி, குற்றச் செயலில் கிடைத்த வருமானத்தை வைத்திருத்தல் மற்றும் நிதிச் சலவையில் ஈடுபடல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சந்தேகநபர் தற்போது இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என டொராண்டோ காவல்துறை நம்புவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கங்காதர் பாபு சுமார் 5 அடி 6 அங்குல உயரம், ஒல்லியான உடலமைப்பு, கருமையான சுருட்டை முடி, அடர் பழுப்பு நிறக் கண்கள், ஒழுங்காக வெட்டப்பட்ட தாடி மற்றும் முன் பற்களுக்கு இடையில் தெளிவான இடைவெளி கொண்டவராக விவரிக்கப்பட்டுள்ளார்.



இந்தநபரால் ஏமாற்றப்பட்டிருக்கக் கூடிய மேலும் பலர் இருக்கலாம் என காவல்துறை சந்தேகிப்பதுடன், வழக்குத் தொடர்பான தகவல்கள் இருப்பவர்கள் முன்வருமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.